விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 28 புதன்கிழமை (11.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

## இறுதி யுத்தத்தில் நடைபெற்றது

# இனப் படுகொலையே!

## வடக்கு மாகாண சபையின் தீர்மானம் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தில் நடைபெற்றது இனப்படுகொலையே. இதனை மேற்கொண்ட இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணை அவசியம் என வட மாகாண முதலமைச்சரினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஈழத்தில் ஆரம்பகாலம் தொட்டு தமிழர்கள் மீது பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பான்மையான விடயங்களை உள்ளடக்கி 11 பக்கங்கள் கொண்ட அறிக்கையாக பிரேரணையினை முதலமைச்சர் முன்மொழிந்திருந்தார். இப்பிரேரணையை மாகாண சபை உறுப்பினர்கள் எழுந்து நின்று வரவேற்றதுடன் ஏகமனதாகவும் நிறைவேற்றினர்.

வடக்கு மாகாண சபையின் 24 ஆவது அமர்வு நேற்றுக்காலை ஆரம்பமானது.

இதில் வடமாகாண சபையில் வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படடு இழுபறி நிலையில் இருந்துவந்த இலங்கையில் நடைபெற்றது இன அழிப்பே என்கிற பிரேரணை முதலமைச்சர் விக்னேஸ்வரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை, இனப் படுகொலையில் இருந்து தமிழ் மக்களைக் காப் 23ஆம் பக்கம் பார்க்க....

## அரசுக்கு சேறுபூச எதிர்க்கட்சி தீவிரம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சேறு பூசுவதில் எதிர்க்கட்சிகள் தீவிரம் காட்டி வருவதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதாக, திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நாட்டில் தற்போது புலி இல்லை. தற்போது புலிகள் மிருகக்காட்சி சாலையில் மட்டுமே இருக்கின்றன.

எதிர்க்கட்சிகளுக்கு எங்கும் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீது சேறு பூசல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் தேசிய அரசாங்கம் ஆட்சி நடத்தி வருகின்றது. எங்களுக்கு பதவிகள் கிடைத்துள்ளன எனினும் அவை நிரந்தரமானவை கிடையாது. எங்களுக்கு எவ்விதமான 23ஆம் பக்கம் பார்க்க....

### மகிந்த குறித்து

## இன்னமும் முடிவில்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியல் மேடைக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தைகள் இடம் பெறுகின்றன. எனினும் இதுவரை முடிவுக்கு வரவில்லை என பொது பல சேனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக எதிர் 23ஆம் பக்கம் பார்க்க....

## விமலின் மனைவி குறித்த விசாரணை முடிவு

(கொழும்பு)

தனது கடவுச்சீட்டுக்கு பொய்யான தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்சவிடம் மேற்கொண்ட இரகசிய பொலிஸாரின் விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சசியின் சாதாரண கடவுச் சீட்டில் பிறந்த வருடமாக 1967 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இராஜதந்திர கடவுச் 23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ், சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சி அமைக்க முயல்கிறது அரசு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தற்போது புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரி அரசு சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே மாறுபட்ட கருத்துக்களை கூறி இரு இன மக்களினையும் ஏமாற்றி மீண்டும் தாம் ஆட்சியினை பிடிக்க முயல்கின்றது என வட மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழினம் இவ்வளவு அழிவினை சந்தித்த பின்னரும் அரசியல்வாதிகள் அரசியல் சதிராட்டத்தில் குளிர்காயவே எத்தனிக்கிறார்கள் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் இலங்கையின் புதிய அரசிற்கு அனுசரணையான விததில் நடந்து கொள்ள அமெரிக்கா விரும்புகின்றது என அவர் தெரிவித்தார்.

நேற்றைய அமர்வில் உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமைச்சர் ருவான் விஜயவர்த்தன இராணுவத்தினரைச் சந்தித்து உங்கள் முகாம்கள் ஒன்றினையும நாம் அகற்றப்போவதில்லை என்று அண்மையில் உறுதிமொழி அளித்துள்ளார். இது அவரின் கருத்து என்று நான் நம்பவில்லை.

**மாமன் - மருமகன்**

தேர்தல் வெற்றியின் பின்னா் நான் கொழும்பில் மேற்படி இளைஞரின் மாமனார் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது அவர் என்னைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் நாங்கள் மகாநாயக தேரர்களிடம் வட மாகாண 23ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாணசபை தீர்மானத்தை ஏற்க அரசாங்கம் மறுப்பு !

(கொழும்பு)

இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றுள்ளது என்று கூறி வட மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளது. ஒரு அரசு என்கிற வகையில் இனப்படுகொலை ஒன்று இலங்கையில் நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.


இறுதிகட்டப் போரின்போது ஏராளமான தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் காப்பாற்றப்பட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

அச்சமயத்தில் சிலர் அட்டூழியங்களைச் செய்திருந்தாலும் அவற்றை இனப்படுகொலை என்று சொல்ல முடியாது.

இனப்படுகொலை என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பது வட மாகாண முதல்வரும், உச்சநீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான விக்னேஸ்வரன் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

கடந்த முறை இதே தீர்மானம் மாகாண சபையில் வந்தபோது அதை ஏற்றுக்கொள்ளாத முதல்வர் இப்போது எப்படி அதை ஏற்றார் எனவும் கேள்வி எழுப்பினார். இறுதி கட்ட போரின் 24ஆம் பக்கம் பார்க்க....


## பிரி.வெளிவிவகார அமைச்சரை சந்தித்துப் பேசினார் மங்கள



(கொழும்பு)

பிரித்தானியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அலுவலக அமைச்சர் ஹுகோ ஸ்வைரை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. இதன்போது தாம் இலங்கையின் 24ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்ற உறுப்புரிமை கோருகிறார் பொன்சேகா



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவியில் அமர்த்தப் பட்டதனைப் போன்றே தமக்கும் பாராளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக போலியாக சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றின் உதவியை 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

இலங்கை பரீட்சை திணைக்களத்தால் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013(2015) நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 14, 15-ம் திகதிகளில் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்காக அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் தகைமை பெற்ற சகல விண்ணதாரிகளுக்கும் அவர்களின் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோரும் முழுப்பெயர், முகவரிகளுடன் 0112785230, 0112177075 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார். (எ-11)

## முதியவர் பலி

மீசாலை, ஏ-9 வீதியில் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மீசாலை ஏ-9 வீதியில் சைக்கிளில் பயணித்த இவரை பின்னால் வந்த பாரவூர்தி மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. அல்லாரையைச் சேர்ந்த கே.சிவனேசன்(வயது - 61) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-11)

# சர்வதேச மத்தியஸ்தத்துடன் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு

## பிரி.உயர்ஸ்தானிகரிடம் சிறிதரன் எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானியர் பிரதி உயர்ஸ்தானிகர் லாரா டேவிஸ் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு பா.உறுப்பினர் சி.சிறிதரனை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச்சந்திப்பின்போது கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின் வடக்கு கிழக்கு தமிழர் வாழும பகுதிகளில் உள்ள நிலைமைகள் தொடர்பாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர், பா.உறுப்பினர் சி.சிறீதரனிடம் வினாவினார்.

இதற்கு பதிலளித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலின் பின்னாக தமிழ் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்ததாக தெரியவில்லை.

மெல்ல மெல்ல மக்கள் இந்த அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையை இழந்தே வருகின்றனர். இன்னும் இராணுவ பிரசன்னங்கள், இராணு முகாம்கள், ரோந்துகள் என்பவற்றில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இப்பொழுதும் கைதுகள் விசாரணைக்கு அழைத்தல் என்பனவும் தொடர்கின்றது. மீள் குடியேற்றம் இன்னும் நிகழவில்லை. அறிவிப்பு நிலையில் இருக்கின்ற பலவிடயங்கள் இன்னும் செயற்படுத்தப்படவில்லை.

தொழில் வாய்ப்பு இன்மையால் முன்னாள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களுக்கு தொழில் வழங்கக்கூடிய பண்ணைகள் தொழிற்சாலைகள் இன்னும் இராணுவப்பிடிக்குள்ளேயே இருக்கின்றது. அல்லது இயங்க வைக்கப்படவில்லை.



போர் காரணமாக தாம் படித்த படிப்புக்கு உரிய வயதில் வேலை பெறமுடியாத நிலையில் தற்பொழுது கோரப்படும் விண்ணப்பங்களுக்கு வயது சென்றமையால் வேலைக்கு விண்ணப்பிக்க முடியாமல் மனப் பாதிப்புக்கு ஏராளம் பேர் உள்ளாகியுள்ளனர் என்றார். (எ-11)

## கிழக்கு மாகாண சபையின் பட்ஜெட் நிறைவேறியது

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்காத நிலையில், மாகாண சபையின் ஏனைய அனைதது உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 34 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டு மாதங்களாக இழுபறி நிலையில் காணப்பட்ட கிழக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

## பஷிலுக்கு பதிலாக சுசிலை நியமிக்க திட்டம்

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ வகித்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் அமைப்பாளர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து கோரியுள்ளனர்.

பஷில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பதவி விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேல் மாகாண சபை உறுப்பினராக அரசியலில் களமிறங்கிய சுசில் மேல் மாகாண சபையின் முதலமைச்சராகவும் பின்னர் பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## என்னிடம் இருப்பது மூன்று கடிகாரங்களே

### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பயன்படுத்திய பெறுமதியான கைக்கடிகாரங்கள் தொடர்பான தகவல்கள் இணையத்தில் வெளியாகியுள்ள நிலையில் இக்குற்றசாட்டை அவர் மறுத்துள்ளார்.

நாமலின் கைக்கடிகாரங்களின் பெறுமதி 59 லட்சத்திற்கும் அதிகமானதென தெரியவந்துள்ளது. இதற்கமைய அவர் பயன்படுத்திய 13 கைக்கடிகாரங்களின் பெறுமதி 7 கோடியே 60 லட்சம் ஆகும்.

50 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறும் பாராளுமன்ற உறுப்பினர் எவ்வாறு இவ்வளவு செல்வங்களை பெற்றுக்கொண்டுள்ளார் என்ற மிக பாரிய கேள்வி ஒன்று எழுப்பப்படுகின்றது.

என்னிடம் 2, 3 கடிகாரங்களே உள்ளன அதில் சில கடிகாரங்கள் பரிசாக வழங்கப்பட்டவை. இணையத்தளத்தில் வெளியிட்டிருக்கும் புகைப்படங்கள் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்துகின்றன. எனினும் மக்கள் இவற்றை நம்புவார்கள் என்று எனக்கு தோன்றவில்லை.

ஒரே கடிகாரத்தை வித்தியாசமான முறையில் புகைப்படங்கள் எடுத்து என் மீது சேறு பூசுவதற்கு நினைக்கிறார்கள் என இணையத் தளங்களில் இடம் பெற்ற கலந்துரையாடலுக்கு இவ்வாறு நாமல் ராஜபக்ஷ பதிலளித்துள்ளார். (எ-11)

## ஜனாதிபதியை சந்தித்தனர் ஈ.பி.டி.பியின் பிரதிநிதிகள்

(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் இச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது மக்கள் முகங் கொடுத்து வருகின்ற நாளாந்த பிரச்சினைகள் மற்றும் சமகால, எதிர்கால அரசியல் நிலைவரங்கள் என்பன குறித்து பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாக சந்தித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர்மட்டப் பிரதிநிதிகள் நேற்றைய தினமும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் 16 கோரிக்கைகள் முன்வைத்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, செயலாளர் நாயகத்தின் இணைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-11)

**விற்பனைக்கு**

அல்சேஷன் நாய்க்குட்டி, L.C.D சாம்சங் ரி.வி, கம்பியூட்டர்கள், சாப்பாட்டு மேசை, தளபாடங்கள், S5 சாம்சங் மொபைல் போன், டீசல் என்ஜின், போட்டோ கொப்பி இயந்திரம், அலுமினிய பிற்றிங்ஸ் என்பன மலிவு விலையில் உண்டு.

T.P:-0755295746 (9486)

## சபை அமர்வில் பிரதம செயலர்

(கொழும்பு)

புதிய பிரதம செயலர் பத்திநாதன் நேற்று வடக்கு மாகாண சபைக்கு முதல் தடவையாக வருகை தந்து சபை நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 24 வது மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது.

இவ் அமர்விற்கு வடக்கு மாகாண த்தின் புதிய பிரதம செயலர் பத்திநாதன் வருகை தந்திருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த 27-ம் திகதி வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக பத்திநாதன் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

JAFFNA COLLEGE
Primary School
Cordially Invites you to its
ANNUAL INTER HOUSE ATHLETIC MEET
to be held on
Friday 13th February, 2015
at 1.30 p.m
in the Bicknel Field
Chief Guests:
Mr. A. Jeyarajan
(Primary & Middle Supervisor (Emeritus) & Hospital Secretary J.D.C.S.I)
&
Mrs. E. T. Jeyarajan
(Junior Vice Principal, Jaffna College)
Supervisor
Jaffna College,
Vaddukoddai.
Principal
(9479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நடந்தது இனஅழிப்புத்தான்



## கவிஞர் காசி ஆனந்தன் ஆவேசம்

(சென்னை)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாற்றம் நிகழாது. அவரும் சீன ஆதரவு நிலைப்பாட்டையே எடுப்பார். தமிழீழத்தில் நடந்தது இன அழிப்பு நடவடிக்கை என்பதை உலகமும் இந்தியாவும் ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே தமிழர்களுக்கு பயனளிக்கும் என்று இந்திய ஈழத்தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

இந்த மையத்தின் தொடக்கத்தை ஒட்டி, சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பாதுகாப்பு ஈழத்தமிழரின் பாதுகாப்பில் அடங்கியுள்ளது. வரலாற்று அடிப்படையில் சிங்களவர், தங்கள் முதல் எதிரியாக இந்தியாவையே கருதி வருகின்றனர். சிங்களவரிடம் காணப்படுகின்ற வரலாற்று ரீதியான இந்திய எதிர்ப்பு வாதத்தின் வெளிப்பாடே ஈழத்தமிழர் மீதான ஒடுக்கு முறையாகும். இதில் கட்சி வேறுபாடுகளை கடந்து அனைத்துச் சிங்கள கட்சிகளும் ஒன்று போல் உள்ளன.

இப்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாற்றம் நிகழாது. அவரும் சீன ஆதரவு நிலைப்பாட்டையே எடுப்பார். தமிழீழத்தில் நடந்தது 'இனஅழிப்பு நடவடிக்கை என்பதை உலகமும், இந்தியாவும் ஒப்புக் கொள்ள வேண்டும். இப்போது அரசு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தமிழர்களுக்கு பலன் ஏற்படாது. அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் ஏற்பட்டால்தான் தமிழர்களுக்கு நல்லது. ஆனால் இது சாத்தியமில்லை. அதனால் தமிழர்களுக்கான புதிய அரசியலமைப்புச் சட்டம் தேவை.

இப்போது ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் நட்புறவு தேவை. அதனை ஏற்படுத்த இந்திய-ஈழத்தமிழர் நட்புறவு மையம் பணி செய்யும் என்றார் காசி ஆனந்தன்.

இந்த சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த தமிழ்செல்வனின் மூத்த சகோதரர் பரமுபாலன், இனப் படுகொலை குறித்த சர்வதேச விசாரணை கோரி உண்ணாவிரதம், நடைபயணம் மேற்கொண்ட ஈழத் தமிழர் சிவந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்தியாவுடன் சிறப்பான உறவை மேம்படுத்திக் கொள்ள விருப்பம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

இந்தியாவுடனான சிறப்பான உறவை பலப்படுத்திக்கொள்ள இலங்கை விருப்பம் கொண்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒருமுறை தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்திய பிரதமர் அவருக்கு வாழ்த்துக்கூறி அனுப்பிய செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே மைத்திரிபால தமது செய்தியை அனுப்பியுள்ளார்.

இந்திய ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று எதிர்வரும் 15ஆம் திகதியன்று மைத்திரிபால சிறிசேன, இந்தியாவுக்கு செல்லும் நிலையிலேயே இந்த செய்தியை ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது. (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சி-9913)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**



UNIVERSITY OF CAMBRIDGE **CAMBRIDGE ENGLISH**

**GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY**

The Cambridge English exams listed below are approved by the U.K Home Office for Spouses and Civil Partner visa Applications to the U.K

**Cambridge - Prelimnary English Test (PET)**

- இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

**Cambridge First Certificate in English (FCE)**

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

**Cambridge Certificate in Advanced English (CAE)**

CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க,
பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

**புதிய வகுப்புக்கள் 16-02-2015ஆரம்பம்**

**Course Schedule**

| Mon,Tuse,Wed,Thur | | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | |
| Time | 10.00 - 12.00 | 03.00 - 05.00 |
| | 03.00 - 05.00 | Exam Date :- May & June |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887
(சி-067)


# இராசி பலன்

11.02.2015
(தை 28, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
சப்தமி பிற்பகல் 4.49 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.29 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
தாயுமான சுவாமிகள்,
திருநீலகண்டர் குருபூசை.

வளவன்

**மேடம்** – வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** – தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** – நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** – தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்துதவ முன்வரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள்.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** – பணியாளர் தொல்லை அகலும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** – பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும்.

**தனுசு** – தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** – நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு, பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**மீனம்** – வரவும் செலவும் சமமாகும் நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து நடப்பது நல்லது, போசன சுகக் குறைவான நாள், பிரயாண பயமுண்டு, சஞ்சலங்கள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 143**

எனக்கு திரும்பவும் பழைய படியே என் கணவன் தேவை. நான் மீண்டும் என் பழைய கோபக்கார கணவனையே விருப்புகிறேன்! என்று சொன்னார்களாம். அவர்கள் சொல்கிறார்கள் வாழ்க்கை அதன் சுவையை இழந்துவிட்டது. நாங்கள் சண்டை போடாவிடில் எந்த விதமான பரிமாற்றமும் இல்லை. அவர் என்னைக் கவனிப்பதேயில்லை!.

அனைவருக்குமே கவனம் தேவைப்படுகிறது! நடத்தையியல் மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள், ஒரு சாதாரணமான மனிதன் உணவில்லாமல் 90 நாட்கள் வரை உயிர் வாழ முடியும். ஆனால், மற்றவர்களுடைய கவனம் இன்றி 14 நாட்கள் மட்டுமே வாழ முடியும்! அவன் பைத்தியமாக ஆரம்பித்துவிடுவான்!

என்ன நடந்திருக்கிறதென்றால், நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதையும், ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வதையும் மறந்துவிட்டோம். அன்பு மறக்கப்பட்ட ஒரு மொழியாகிவிட்டது! அதனால் ஒருவருக்கொருவர் இணைந்து செயலாற்றவும், கவனம் கொள்ளவும் நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கை ஒருவரோடு ஒருவர் சண்டை போடுவது தான்!

இங்கு அமர்ந்திருப்பவர்கள், தங்கள் கணவன்மார்கள் அல்லது மனைவிமார்கள் ஆன்மீக வழியில் இல்லை என்று குறை கூறிக் கொண்டு இருப்பவர்களே கூட, அவர்கள் கணவன் அல்லது மனைவி ஆன்மீக வழியில் சென்றுவிட்டால் திரும்ப வந்து அவர்களது பழைய கணவன் அல்லது மனைவியே திரும்ப வேண்டும் என்று குறை கூறக்கூடும்.

(பங்கேற்பவர்களிடம் இருந்து சிரிப்பும் எதிர்ப்பும்!)

சரி! நீங்கள் மாறுபட்டவர்கள் என்று சொல்கிறீர்கள் பார்ப்போம்...!

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!



இந்த மூலாதார சக்கரத்தைப் பற்றிய அற்புதமான ஒரு விடயம் என்னவென்றால், இந்த ஒரு சக்கரத்தைத் திறந்தாலே, உங்கள் பிரச்சினைகள் 50 சதவிகிதம் மறைந்து விடுவதைக் காண்பீர்கள்! இந்த ஒரு சக்கரம் மட்டுமே உங்கள் வாழ்க்கையில் 50 சதவீதத்திற்கும் மேல் நிர்வகிக்கிறது. நீங்கள் எதைச் செய்தாலும் அதில் இந்தச் சக்கரத்தின் ஒரு தடத்தைக் காண முடியும்! உங்களுடைய கையெழுத்தில்கூட, இந்தச் சக்கரத்தின் தடத்தைக் காண முடியும்! மூலாதாரச் சக்கரம் தூண்டிவிடப்படுமானால், உங்கள் கையெழுத்துக் கூட மாறிவிடும். நீங்கள் ஒரு மலரைப் பறித்தால் அதை நீங்கள் செய்யும் விதம் மாறுபட்டிருக்கும்.

நாயன்மார்கள் என்று அழைக்கப்படும் தமிழ் இறை அடியார்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லும் ஒரு பாடல் இருக்கிறது. அவர்கள் மலர்களைப் பறித்தால், அந்த மரத்திற்கு வலியே தெரியாதாம்! அதன் பொருள் என்ன? இந்தச் சக்கரம் திறக்கப்படுமானால், நீங்கள் மிகவும் நுட்பமான உணர்வு உடையவர்களாகவும் அன்பு மிக்கவர்களாகவும் ஆகிவிடுவீர்கள். இந்தச் சக்கரத்தின் சக்தி உருமாற்றமடையும் பொழுது அது உங்களிடமிருந்து அன்பாகப் பொங்கிப் பிரவகிக்கிறது!

காமம் கரி போன்றது! அன்பு வைரம் போன்றது; காமம் சேற்றைப் போன்றது; அன்பு அதில் மலரும் தாமரை போன்றது: பொருள் ஒன்று தான். ஒரே ஒரு விடயம் என்னவென்றால் அதை எவ்வாறு பக்குவப்படுத்துவது என்று தெரியவேண்டும். உங்கள் எதிர்பார்ப்புகளை விட்டு விடுங்கள். ஒரு பெரும் சக்தி அலை போலப் பாய்வதைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் அனைவரும் வீட்டில் இந்த உத்தியை முயற்சி செய்து பாருங்கள்; கீழே அமர்ந்து மூலாதார சக்கரத்தில் உங்கள் மனதை ஒருமுகப்படுத்துங்கள். நீங்கள்; கவனித்தால், உங்கள் மூலாதாரச் சக்கரம் எப்பொழுதும் இறுக்கமாக இருப்பதைக் காணலாம். அது எப்பொழுதும் இறுக்கமாகத் தான் இருக்கும்.

ஒரு ஐந்து நிமிடங்கள், உங்கள் கணவனை அல்லது மனைவியை, அவர்கள் செய்த எல்லாவற்றையும் மனதால் மன்னித்து விடுங்கள். உண்மையாக மன்னித்துவிடுங்கள்; வேர் வரை சென்று சின உணர்வையும் வருத்தங்களையும் விட்டு விடுங்கள். இதை முழுமையாகச் செய்யுங்கள். அவர்களை வெறுமனே உள்ளவாறே ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களுக்கு உங்கள் ஆழமான அன்பை அளியுங்கள். ஐந்து நிமிடங்கள் கழித்து, மூலாதார சக்கரம் முற்றிலும் தளர்வாக இருப்பதைக் காண்பீர்கள்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

**இந்தா வாங்கிக்கோ!....**

**போட்டோ கிராபருக்கு கொரில்லா விட்ட பஞ்ச்...**

Rwanda-விலுள்ள Volcanoes தேசிய பூங்காவில் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்த 46 வயதான Christophe Courteau என்பவரை முகத்தில் தாக்கியுள்ளது.



குறித்த 250 கிலோகிராம் எடைகொண்ட கொரில்லாவின் அசைவுகளை படம்பிடிக்கும் போதே அது கோபங்கொண்டு மூர்க்கமாகத் தாக்கியுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## கரட் பொரியல்



**தே.பொருட்கள்:-**

பாசிப்பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்

கேரட் - 3-4

கடுகு - 1/2 டீஸ்பூன்

வெங்காயம் - 1/2 (நறுக்கியது)

உளுத்தம் பருப்பு - 1/2 டீஸ்பூன்

பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை

கறிவேப்பிலை - சிறிது

மஞ்சள் தூள் - 1/2 டீஸ்பூன்

துருவிய தேங்காய் - 4 டேபிள் ஸ்பூன்

பச்சை மிளகாய் - 2 (நறுக்கியது) சீரகம் - 1/2 டீஸ்பூன் நெய் - 1 டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

**செய்முறை:-**

முதலில் கரட்டின் தோலை நீக்கிவிட்டு, அதனை சிறு துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் பாசிப்பருப்பை நீரில் ஊற வைத்து, நீரை வடித்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, பெருங்காயத் தூள், கறிவேப்பிலை மற்றும் உளுத்தம் பருப்பு சேர்த்து தாளிக்க வேண்டும். பிறகு வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்கி, பின் பாசிப்பருப்பு, மஞ்சள் தூள் மற்றும் கரட் சேர்த்து 2-3 நிமிடம் வதக்கி விட வேண்டும். பின் அதில் 1/2 கப் தண்ணீர் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி, மூடி வைத்து, குறைவான தீயில் வேக வைக்க வேண்டும். கரட் நன்கு வெந்து, தண்ணீர் வற்றியதும், அதில் தேங்காயை சேர்த்து பிரட்டி இறக்கினால், கரட் பொரியல் ரெடி!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாவேன் என்று கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை - மைத்திரி

**“(கொழும்பு)**

**நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இலக்கை வெற்றிகொள்ள முடியும் என்று முழுமையான நம்பிக்கை எமக்குள்ளது. நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாவேன் என்று கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.”**



பொலனறுவை றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கல்லூரியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப விஞ்ஞான கூடக் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உட்பட அரசியல்வாதிகள். முக்கியஸ்தர்களுடன் கல்விச் சமூகத்தைச் சார்ந்த பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

எனது வாழ்வில் நான் எதிர் கொண்ட பல்வேறு சவால்களை வெல்வதற்கு எனது ஆத்ம நம்பிக்கை உறுதுணையாக இருந்துள்ளது. நாம் சிலவேளை இலகுவானது பற்றியே சிந்திக்கின்றோம். கஷ்டம் என்றால் அதனை கைவிட்டு விடுகின்றோம்.

மாணவர்கள் தமது இலக்கு அல்லது சாதகமான வெற்றியை அடைய இத்தகைய எதிர்ப்புகள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தயாராக இருப்பது முக்கியம். நான் இதுபோன்ற பலவற்றைக் கடந்தே இன்று நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளேன்.

நான் அப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாவேன் என்று கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் நான் எனது பாடசாலையான பொலனறுவை றோயல் கல்லூரியின் 50 வருட நிறைவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. நான் மண்ணோடு மண்ணாகியிருப்பேன். அதுவே உண்மை நிலை.

தேர்தல் காலங்களில் மாலைப் பொழுதில் தொலைக்காட்சி பார்க்க எனக்கு நேரம் இருக்கவில்லை. எனினும் என்னைப் பற்றி என் நற்பெயரைக் களங்கப்படுத்தும் வகையிலும் எந்தளவு மோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை எனது நண்பர்கள் மூலம் கேட்டு அறிந்து கொள்ள முடிந்தது.

கடந்தகால முட்பாதை அனுபவங்களே கடும் சவாலான போராட்டத்தோடும் இந்த நாட்டை ஆட்சி செய்யும் பொறுப்பை எனக்கு வழங்கியுள்ளனர்.

புதிய அரசாங்கம் என்ற வகையில் நாட்டில் பல மாற்றங்களுக்கு நாம் வித்திட்டுள்ளோம்.

இந்த சவால்களை எம்மால் வெற்றி கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முதல் காதலை மறப்பது கடினம் புது ஆய்வில் பழைய முடிவுதான்

முதல் காதலை மறப்பது மிகக் கடினம் என்று பிரிட்டனில் நடத்தப் பட்ட புதிய ஆய்வு ஒன்றின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவானது. தமிழ் இலக்கியம். சினிமா உள்ளிட்ட அனைத்து வடிவங்களிலும் பல்வேறு கால கட்டத்தில் வெவ்வேறு வழிகளில் சொல்லப்பட்ட பழைய விடயம் தான்.

பிரிட்டனில் இந்தப் புதிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தங்கள் முதல் காதலை இன்னும் நினைத்துக் கொண்டிருப்பதாகவும். 10இல் 4 பேர். பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களின் உதவியுடன் மீண்டும் முதல் காதலோடு இணைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. 10 இல் 4 பேர் தங்கள் பழைய காதலைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும். இன்னும் பழைய நினைவுகளை சுமப்பதாகவும் இந்த ஆய்வில் பதிலளித்துள்ளனர். “தி பெஸ்ட் ஆப் மீ“ (The Best of Me) என்ற திரைப்படத்திற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் இவ்வாறு தெரிய வந்துள்ளது. முதல் காதலுக்கு இரண்டாம் வாய்ப்பை தரும் இருவரைப் பற்றிய படம் இது.

“பலர் தங்கள் முதல் காதலை திரும்பிப் பார்க்கும்போது, என்ன நடந்தது, என்ன நடந்திருக்கலாம், நடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என நினைக்கின்றனர்” என தயாரிப்பு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (இ-5)

# அரசியல் அடிப்படையில் மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்க முடியாது

(கொழும்பு)

அரசியல் அடிப்படையில் மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்க முடியாது என பொதுநிர்வாக மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் பேதங்களுடன் மக்களுக்கு சேவையாற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கண் காணிக்கப்படுகின்றது. அவ்வாறு அரசியல் பேதம் பாராட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்கப் போவதில்லை.

எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் அரசியல் ரீதியாக பிரிவினை பாராட்டுவதில்லை. கடந்த காலங்களில் எதிர்க்கட்சிகளுக்கு அதிகாரம் இருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

அவ்வாறான அநீதிகளை புதிய அரசாங்கம் இழைக்காது. மக்களின் வரிகளைக் கொண்டு முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மக்களுக்கு நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டுமென கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.


பத்தரமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

**280**

Search for people, places and things — Nagendram Home

### பிரபா பாலா




### கோகுலன் கோவி




### டினோ டினோ





### ப்ரிய துஷா




### கீர்த்தனா கருணாகரன்




### சர்மி சர்மிளா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதார தொண்டர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகளில் பணிபுரியும் சமூக சுகாதார தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதார அமைச்சின் பணிமனைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட சுகாதார தொண்டர்கள் இது தொடர்பில் கூறுகையில், "யாழ் .மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகளில் 10 வருடங்களுக்கும் மேலாக சுகாதார தொண்டர்களாக பணிபுரிகின்றோம். ஆரம்ப காலத்தில் எமக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன. 2012ஆம் ஆண்டுக்கு பின்னர் 6 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 3 மாதங்களாக சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளது" என்றனர். "234 சுகாதார தொண்டர்கள் தற்போது பணிபுரிகின்றோம். எமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பலமுறை சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடுத்திருந்தோம். இதுவரையில் சாதகமான முடிவு கிடைக்கவில்லை. ஆகையால் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை நடத்துகின்றோம். வடமாகாண சுகாதார அமைச்சரின் செயலாளர் ஆர்.ரவீந்திரனிடம் இது தொடர்பாக முறையிட்ட போது, உங்களுடைய விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன, அனுமதி கிடைத்தவுடன் நிரந்தர நியமனம் வழங்குவோம் என அவர் கூறியதாக தொண்டர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-5)




## மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

மாரீசன்கூடல் றோ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சசிவானந்தராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை அதிபர் ஆர்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பிரதம விருந்தினராகவும் நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எ.அகிலதாஸ் சிறப்பு விருந்தினராகவும் பழைய மாணவன் ஜெ.றெனின் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் முருகையா கோமகனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாண சபைக்கு முன்னாள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் 24 ஆவது சபை அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிலையில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் கோமகனின் விடுதலைக்கான மக்கள் அணியினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கான மகஜர் ஒன்றினையும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் கற்குளம் கொட்டடியைச் சேர்ந்த முருகையா கோமகன் 2009ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி கட்சியின் ஊடாக போட்டியிட்டு வெற்றியீட்டி மாநகர சபை உறுப்பினரானார்.

அதனையடுத்து கடந்த 2010. 08.23ஆம் திகதி யாழில் வைத்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு எவ்விதமான அடிப்படை குற்றச்சாட்டுக்களும் இன்றி கடந்த 5 வருட காலமாக கொழும்பு பெரிய மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் விதியின் கீழ் கொழும்பு மற்றும் வவுனியா நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணை என்ற பெயரில் காலம் கடத்தப்பட்டு வருகின்றது.

எனவே கோமகனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாற்றத்தை வேண்டி தங்களுக்கு வாக்களித்த எமது சமூகம் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார 320இற்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)




## ஆயுள்வேத மருந்தகம் கீரிமலையில் இன்று திறப்பு

கீரிமலை ஆயுள்வேத மத்திய மருந்தக திறப்புவிழா இன்று புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு கீரிமலை கருகம்பனையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சமூக சேவைகள் புனர்வாழ்வு மகளிர் விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், க.விந்தன், பா.கஜதீபன் ஆகியோரும் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-5)

## விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை-2015

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தற்போது தரம் 6 இல் யாழ்.வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எதிர் வரும் 14 ஆம்திகதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும் வலய மட்ட தெரிவுப் பரீட்சையில் உரிய பொறுப்பாசிரியர்களுடன் சமுகமளித்துத் தோற்ற முடியும் என யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (இ









வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நூலக கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ. சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன், அ.விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து பிரதம விருந்தினர் மாவை சேனாதிராசா சரஸ்வதியின் உருவச்சிலையை திரைநீக்கம் செய்ததுடன். 5.2 மில்லியன் ரூபா சபை நிதியில் கட்டப்பட்ட கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைத்தார். மேலும் இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சித்தார்த்தன், ஆனோல்ட், விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாசகர்களே!

# உங்கள் வலம்புரியில் வாசகர்களின் அபிமானத்திற்குரிய

# வலம்புரி வாரமலர் சங்குநாதம்

**15.02.2015 (ஞாயிற்றுக்கிழமை)**
முதல் ஒவ்வொரு ஞாயிறும்
கவிதை, சினிமா, விதுரனின்
அதிரடி அரசியல் கட்டுரைகள்,
ஆலடி மாநாடு,
வியாசர் பதில்கள், சிறுவர் பகுதி...
என இன்னும் இன்னும் பல
சுவாரஸ்யமான விடயங்களுடன்
வெளிவரும்.
வாசிக்கத் தவறாதீர்கள்.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம் அனுசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ கணிய அளவையாளர்<br>தொ.இ: B/237 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 27 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ அதிபர்<br>தொ.இ: G/471 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்<br>தொ.இ: B/240 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 04<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: G/475 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: தனியார் (கனடா PR)<br>தொ.இ: B/242 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம் விசாகம்<br>கி.பா: 20 1/2 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/476 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 15 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/243 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 7 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: AAT<br>தொ.இ: G/480 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பொன்விழா நாயகியின் சேவைநலன் பாராட்டு



## செல்வி லீலாவதி மாரிமுத்து

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலையில் 11.02.1965 தொடக்கம் இன்றுவரை தொடர்ந்தும் 50 ஆண்டுகளாக சேவையாற்றிவரும் பொறுப்பாசிரியர் செல்வி. லீலாவதி மாரிமுத்து அவர்களை இன்று பொன்விழா நன்நாளிலே பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் உங்கள் சேவை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-075)

பாலர் பாடசாலை ஆசிரியர்கள்
பொ.சர்மிலா, லோ.யுகந்தினி,
தே.தயாளினி, கே.நாகமீரா, சி.அஜிதா

சித்தன்கேணி


## மேலதிக செயலாளர் மீது ஊழல் மோசடி முறைப்பாடு

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர ஜயரட்னவுக்கு எதிராக கடல் காதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஆயுதக் கப்பலின் உரிமையாளர், ஊழல், மோசடி வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

என். எஸ்.டி என். கடல்பாதுகாப்பு நிறுவனத்தின் உரிமையாளரான மேஜர் நிஷாந்த ராஜபக்ஷ, சோமாலிய கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்த லிலிருந்து இலங்கை கடல் எல்லையை பாதுகாப்பதற்கான சேவையை தமது நிறுவனத்திற்கே முதன்முதலாக பெற்றுத்தருவதாக கூறினார். இந்த நிறுவனம் பெருமளவிலான ஆயுதங்களுடன் பயிற்சியும் அனுபவமும் நிறைந்த விசேட பாதுகாப்பு அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் கொமாண்டோக்களையும் கடற் பாதுகாப்புக்காக வழங்க முன்வந்துள்ளது.

இந்நிலையில், கடல் பாதுகாப்பிற்காக வேறு ஒரு பாதுகாப்பு நிறுவனத் தின் சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மேலதிக செயலாளர் ஜயரட்ன தனது நிறுவனம் மீது பாரபட்சமாக நடந்துகொள்வதாக அவர் முறைப்பாடு செய்துள்ளார். நிஷாந்த ராஜபக்ஷ, இலங்கை இராணுவத்தின ஓய்வுபெற்ற அதிகாரியாவார். இவர் சில அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்தார். (இ-5)


## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலை ஆசிரியர்

### செல்வி லீலாவதி மாரிமுத்து



கல்விச்சேவையில் ஐம்பது ஆண்டுகள் சேவையாற்றி பொன்விழா ஆண்டில் பல அரும்புகளை ஆன்றோர் சான்றோர் என உருவாக்கி சாதனை படைத்த உங்கள் சேவை என்றென்றும் தொடரவும் இறையாசியோடு பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழவும் பொன் விழா நாளில் இதயத்தால் வாழ்த்துகின்றோம்.

(சி-074)

வாழ்த்துவோர்:
ஜெ.ஆதித்தியன் (மாணவன்),
ஜெயபாலசிங்கம் மைதிலி (பெற்றோர்),
அதிபர், வள்ளுவர் அக்கடமி

கல்வளை,
சண்டிலிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டில்லி சட்டப் பேரவைத் தேர்தலில்

# ஆம் ஆத்மி கட்சி அமோக வெற்றி



**(புதுடில்லி)** இந்தியாவின் தலைநகரான டில்லி சட்டப் பேரவைத் தேர்தலில் ஊழலுக்கு எதிராக களமிறங்கிய ஆம் ஆத்மி கட்சி 66 இடங்களைத் தனதாக்கி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் அதேவேளை முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

### மீண்டும் முதல்வராகிறார் கெஜ்ரிவால்
### காங்கிரஸுக்கு மரணஅடி
### பா.ஜ.கவுக்கு பின்னடைவு
### கருத்துக்கணிப்பு பொய்த்துப் போனது

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்றுக் காலை 8 மணிக்கு 14 மையங்களில் பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.

70 உறுப்பினர்களைக் கொண்ட டில்லி சட்டப்பேரவைக்கு கடந்த சனிக்கிழமை தேர்தல் நடைபெற்றது. இதில், மொத்தம் 67.14 சதவீத வாக்குகள் பதிவானது. 70 தொகுதிகளிலும் மொத்தம் 673 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தலுக்கு பின் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகளில் பெரும்பாலானவை கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சிக்கே சாதகமாக அமைந்தன. அதிகபட்சமாக அக்கட்சி 53 தொகுதிகளை கைப்பற்றும் என்றும் கணிக்கப்பட்டு இருக்கிறது.

ஆனாலும் பா.ஜ.க. எடுத்த கருத்து கணிப்பில், அந்த கட்சிக்கு 34 முதல் 38 இடங்கள் வரை கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆம் ஆத்மி, பா.ஜ.க. இடையே நிலவும் கடும் போட்டி காரணமாக காங்கிரஸ் கட்சி இந்த தேர்தலில் அதிகபட்சமாக 5 இடங்களை கைப்பற்றும் என்று கருத்து கணிப்புகள் தெரிவித்திருந்தன. ஆனால் கருத்துக் கணிப்புகளை யெல்லாம் அடித்து நொறுக்கி விட்டது ஆம் ஆத்மி.

ஆம் ஆத்மி - 66
பா.ஜ.க. - 3
காங்கிரஸ் - 0
மற்றவை - 1

இந்த தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி முன்னிலை பெற்றுள்ளதை அடுத்து அக்கட்சியினர் உற்சாகம் அடைந்துள்ளனர். கட்சி அலுவலகத்தில் திரண்ட தொண்டர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடியிருந்தனர்.

ஆம் ஆத்மி முதல்வர் வேட்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் வெற்றி பெற்றுள்ளார். ஆம் ஆத்மி கட்சி கடந்த முறை ஆட்சியில் இருந்த போது சட்ட அமைச்சராக இருந்த சோம்நாத் பாரதி மால்வியா நகர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

**கிரண் பேடி: பின்னடைவும் முன்னிலையும்**

கிருஷ்ணா நகர் தொகுதியில் போட்டியிட்ட பா.ஜ.க. முதல்வர் வேட்பாளர் கிரண் பேடி முதலில் பின்னடைவை சந்தித்தார். இருப்பினும் நண்பகல் 12 மணி அளவில் அவர் முன்னிலை பெற்றார்.

**அஜய் மக்கான் பின்னடைவு...**

சதர் பஜார் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் அஜய் மக்கான் பின்னடைவை சந்தித்துள்ளார். இந்த தொகுதியில் போட்டியிட்ட ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர் சோம் தத் முன்னிலை வகித்துள்ளார்.

இதேபோல், பாவனா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேத் பிரகாஷ், பத்பர் கஞ்ச் தொகுதியில் போட்டியிட்ட மணீஷ் சிசோடியாவும் முன்னிலை வகித்துள்ளார்.

**பெப்.14இல் கெஜ்ரிவால் பதவியேற்பு?**

இதனிடையே, வரும் 14ஆம் திகதி டில்லி முதல்வராக அரவிந்த் கெஜ்ரிவால் பதவியேற்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-5)




## கறுப்புப்பணத்தை வெளிநாடுகளில் பதுக்கிய 1195 இந்திய முதலைகளின் பெயர் அம்பலம்

சுவிஸ் வங்கியில் கறுப்பு பணம் வைத்துள்ள ஆயிரத்து 195 இந்தியர்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

சுவிஸ் நாட்டில் உள்ள எச்.எஸ்.பி.சி. வங்கியில் கறுப்பு பணம் போட்டு வைத்துள்ள 628 இந்தியர்களின் பட்டியல், கடந்த 2011ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டு அரசிடம் இருந்து மத்திய அரசுக்கு கிடைத்தது. அந்த பட்டியலில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சுவிஸ் நாட்டின் எச்.எஸ்.பி.சி. வங்கியில் கறுப்பு பணம் போட்டு வைத்துள்ள மேலும் ஆயிரத்து 195 இந்தியர்களின் பெயர் பட்டியல் நேற்று முன்தினம் ஒரு ஆங்கில பத்திரிகையில் வெளியானது.

அந்த பட்டியலில், கடந்த 2006-2007ஆம் நிதி ஆண்டில் அவர்களது வங்கி கணக்கில் இருந்த பண விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 195 இந்தியர்களும் வைத்திருந்த மொத்த பணம் ரூ.25 ஆயிரத்து 420 கோடி ஆகும்.

இந்த பட்டியலில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் பிரனீத் கவுர்.

### தொழிலதிபர்களும் சிக்கினர்

காங்கிரஸ் முன்னாள் எம்.பி. அன்னு தாண்டன், மறைந்த முன்னாள் மத்திய அமைச்சரும், சோனியா காந்தி குடும்பத்தின் விசுவாசியு மான வசந்த் சாத்தேவின் குடும்பத்தினர்.

முன்னாள் சிவசேனா தலைவரும், தற்போது காங்கிரசில் இருப்பவருமான நாராயண் ரானேவின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள். மறைந்த சிவசேனா தலைவர் பால்தாக்கரேவின் மருமகள் சுமிதா தாக்கரே ஆகிய அரசியல் பிரமுகர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

தொழில் அதிபர்களில், முகேஷ் அம்பானி, அனில் அம்பானி, ஜெட் ஏர்வேஸ் விமான நிறுவனத்தைச் சேர்ந்த நரேஷ் கோயல், எமார் எம்.ஜி.எப். குழுமத்தைச் சேர்ந்த ஷ்ரவன் குப்தா, பிர்லா குழும கிளை, ஷா வாலஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சாப்ரியா குடும்பத்தினர், டாபரின் பர்மன் குடும்பத்தினர், எஸ்கார்ட்ஸ் குழுமத்தின் நந்தா குடும்பத்தினர் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி கூறியதாவது, இந்தபட்டியலில்உள்ள பெரும்பாலான பெயர்கள். ஏற்கனவே வெளியானதுதான். இருப்பினும் சில புதிய பெயர்களும் வெளியாகியுள்ளன. அவற்றை பற்றி விசாரணை அமைப்புகள் விசாரணை நடத்தும்.

பட்டியலில் உள்ள எல்லோருமே சட்டவிரோதமானவர்களாக இருக்கமாட்டார்கள். ஏனென்றால், சிலர் தங்களது வெளிநாட்டு வர்த்தக பரிவர்த்தனை குறித்து வருமான வரித்துறைக்கு தெரிவித்துள்ளனர். வேறு சிலர் வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் ஆவர். இருப்பினும் ஆதாரம் இல்லாவிட்டால், வெறும் பெயர்கள் வேலைக்கு ஆகாது. ஆதாரமும் இருந்தால்தான், வலுவான வழக்காக பதிவு செய்ய முடியும்.

ஏற்கனவே பெறப்பட்ட 628 பெயர்கள் கொண்ட பட்டியலில், 60 பேருக்கு எதிராக வருமான வரித் துறை வழக்கு தொடர்ந்துள்ளது. மீதியுள்ளவர்களின் பெயர் மற்றும் முகவரியை சரிபார்ப்பது கடினமாக உள்ளது.

ஆயினும், அப்பணி, மார்ச் 31ஆம் திகதிக்குள் முடிவடையும் என்றும் சட்டத்தை மீறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கெஜ்ரிவாலுக்கு மோடி வாழ்த்து




டில்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைப்பது உறுதியாகியுள்ள நிலையில் அந்த கட்சியின் தலைவர் அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி உறுதியாகிவிட்டுள்ள நிலையில், அர்விந்த் கெஜ்ரிவாலை தொலைபேசியில் தொடர்புகொண்டு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறும்போது, "நான் அர்விந்த் கெஜ்ரிவாலை தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தேன். டில்லியின் வளர்ச்சிக்கு மத்திய அரசு எப்போது உறுதுணையாக இருக்கும்"

பிரதமர் நரேந்திர மோடியிடம் வாழ்த்து பெற்ற கெஜ்ரிவால், "டில்லியின் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க விரைவில் நான் உங்களை வந்து சந்திக்கின்றேன். மத்திய அரசின் உறுதுணை அவசியமானது" என்று பதிலளித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை.மூன்றாம் வருட மாணவி மரணம்

(மல்லாவி)

கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் மூன்றாம் வருட மாணவி ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. இதில் மல்லாவி புகழேந்தி நகர் கிராமத்தைச் சேர்ந்த சின்னையா தர்மிளா (வயது- 24) என்ற பல்கலை மாணவியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பல்கலையில் கல்வி பயின்று வந்த நிலையில் திடீரென ஏற்பட்ட காய்ச்சல், வயிற்றுக்குத்து காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையிலேயே இவரது உயிர் பிரிந்தது.

இவரது மரணம் தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறுதி கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (2-15)

# இரணைமாதாநகர் கிராமத்தில் கடற்பாசி வளர்ப்பு




**கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலக பிரிவின் இரணைமாதா நகர் கிராமத்தில் கடற்பாசி வளர்க்கும் திட்டத்துக்கு தெரிவாகிய 50 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலக உத்தியோகத்தர் ச.சலீபன் தெரிவித்துள்ளார்.**

இதற்கான நிதி ஒதுக்கீடு முன்னைய அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கப்பட்டு, தற்போது சமுர்த்தி அமைச்சால் வழங்கப்பட்ட நிதியை, பூநகரி பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

கடற்பாசி வளர்க்கும் திட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் வலைப்பாடு, பள்ளிக்குடா ஆகிய கிராமங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது இரணைமாதா நகரிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடற்பாசியிலிருந்து பெறப்படும் கரஜினன் எனும் திரவம் மருத்துவ குணம் வாய்ந்தது. இந்தத் திரவம் விலங்குணவுகளுக்கும் பாவிக்கப்படுகின்றது. ஹேலீஸ் எனும் தனியார் நிறுவனம் இவ்வாறு உற்பத்தியாகும் கடற்பாசிகளைக் கொள்வனவு செய்து வருகிறது. இதனால் உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தலை பற்றி எவ்வித பயமுமின்றி கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட முடியும்.

மீனவர்கள் தங்களின் மேலதிக வருமானத்தை பெறுவதற்காக இந்த கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (2)




# கிளி.மாணவர்களுக்கான அரை மரதன் ஓட்டப்போட்டி

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான அரை மரதன் ஓட்டப்போட்டி (21கிலோ மீற்றர்) எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6மணிக்கு கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பித்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையை சென்றடையும்.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மட்டத்தில் வீதியோட்டப் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய வீரர்கள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் அறிவுறுத்தலுக்கு அமைய போட்டியில் பங்கேற்க முடியும்.

அத்துடன் வெற்றியீட்டும் வீரர்களுக்கு பெறுமதிமிக்க ஊக்குவிப்புத்தொகை வழங்கப்படவுள்ளதுடன் மேலதிக தொடர் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தின் செயலாளர் அறிவித் துள்ளார். (2-277)

# சுயதொழில் ஓய்வூதியத் திட்டம்; கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

(கிளிநொச்சி)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு அதிக பயனாளிகளை இணைத்த மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுவதாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான இணைபபாளர் பாக்கியராசா பிரதீபன் தெரிவிததுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 349 பேர் இந்த சுயதொழில் ஓய்வூதியத்தில் இணைந்துள்ளனர்.

இரண்டாமிடத்தில் 2 ஆயிரத்து 163 பயனாளிகள் இணைந்த குருநாகல் மாவட்டமும், மூன்றாமிடத் தில் ஆயிரத்து 900 பயனாளிகள் இணைந்த புத்தளம் மாவட்டமும் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு இந்தத் திட்டம் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு அதிக பயனாளிகளை இணைத்த மாவட்டமாக மாறியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் ஆயிரத்து 860 பயனாளிகள் இத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் 4 பிரதேச செயலர்களும் சிறந்த பங்களிப்பை வழங்கியமையை அடுத்தே அதிக பயனாளிகளை இணைக்க முடிந்தது என அவர் மேலும் கூறினார். (2)



முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட விசுவமடு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டுப் போட்டி அண்மையில் விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற போது...

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வடக்கு மாகாணத்தில் சாரணிய பயிற்சிக்கு பொறுப்பானவர்களுக்கான பயிற்சி பாசறை

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தில் சாரணிய பயிற்சிக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கான பயிற்சி பாசறை எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ். விக்ரோறியா கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறுமென கிளிநொச்சி மாவட்ட கௌரவ சாரணர் ஆணையாளர் மா. புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி சாரணர் பயிற்சி பாசறையானது வடமாகாணத்தின் கீழுள்ள சாரணிய மாவட்டங்களான முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய ஏழு மாவட்டங்களிலும் உள்ள சாரணிய பயிற்சிக்கு பொறுப்பாகவுள்ள உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கே நடைபெறவுள்ளது.

அவ்வாறு பொறுப்பான உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர்கள் இல்லாதவிடத்து அதற்கு தற்போது பொறுப்பாகவுள்ளவர்கள் இப்பயிற்சி பாசறையில் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சாரணிய மாவட்டத்திலிருந்தும் தலா ஐந்து பேர் வீதம் பயிற்சி பாசறையில் கலந்து கொள்ள முடியும்.

இப்பயிற்சி பாசறைக்கு தலைமை தாங்கி பயிற்சிகளை வழங்குவதற்கு கொழும்பிலிருந்து தேசிய சாரணர் பயிற்சி ஆணையாளர் கொடகந்த ஆராச்சி வருகைதந்து கலந்து கொள்ளவுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 021 222 7228 அல்லது 077 069 0923 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# 2 மில்லியன் ரூபா செலவில் பெரியமடுகுளம் புனரமைப்பு

(மன்னார்)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட 2 மில்லியன் ரூபா நன்கொடை நிதியிலிருந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய மடுகுளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக நான்காம் கிளை வாய்க்கால் புனரமைப்பு பணி நிறைவு பெற்றுள்ளது.

அத்துடன் சிதைவடைந்திருந்த 80 மீற்றர் மண்வாய்க்கால் தற்போது சீரான கொங் கிறீட் வாய்க்காலாக மாற்றப்பட்டுள்ளதுடன் சிதைவடைந்த திசை திருப்பி, சீராக்கி மற்றும் கழிவு வாய்க்கால் மதகு என்பன மீளமைக்கப்பட்டுள்ளன.

இப்புனரமைப்பு பணி மூலம் கைவிடப்பட்டிருந்த 150 ஏக்கர் விஸ்தீரண நெற் காணிக்கான நீர் விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 50 விவசாயக் குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் மீண்டுவரும் செலவீனம் 2013 இற்கமைவாக 1.20 மில்லியன் ரூா செலவில் மன்னார் மாவட்டத்திலுள்ள மருதமடு அணைக்கட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

வன்னியில் நடைபெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக கடந்த 30 வருடங்களாக கைவிடப்பட்டிருந்த மேற்படி அணைக்கட்டையும் அதில் இருந்து ஆரம்பமாகும் விநியோக வாய்க்கால்களையும் புனரமைக்கும் பொருட்டே இவ்வேலை முன்னெடுக்கப்பட் டது.

இதனூடாக அணைக்கட்டு திருத்தப்பட்டு இரு விநியோக வாய்க்கால்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் 6 சிறு குளங்களுக்கு நீர் எடுத்துச் செல்லப்பட்டு அவற்றின் ஊடாக 560 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு நீர் விநியோகிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் 185 விவசாயக் குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆனந்தனின் அமரகாவியம்

ஆலந்தூரிலிருந்த ஆனந்தன் என்பவன் தான் புகழ் பெற்றவனாகத் திகழ வேண்டும் என்று எண்ணினான்.

அவன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனாலும உழைத்துச் சம்பாதித்து சிக்கனமாக இருந்து, வாழ ஒரு வீட்டை வாங்கி விட்டான். தன் மனைவிக்கும் நகைகள், பட்டுப் புடவைகள் என்று வாங்கியும் கொடுத்தான். ஒருவாறாக வாழ்க்கையில் நிலைத்து அவன் சுகமாக நாட்களைக் கழித்து வந்தான்.


கொஞ்சம் வசதி ஏற்பட்டதும் தான் புகழ் பெற ஏதாவது ஒரு அரிய செயலைச் செய்ய வேண்டும் என்று அவன் எண்ணினான்.

ஏனெனில் அப்போது வசதியாகப் பெரிய மனிதனைப் போல அவனை யாரும் புகழவில்லையே என்று நினைத்ததே அதற்குக் காரணம்.

அவன் பலரிடம் தான் வாழ்ந்து வரும் உயரிய வாழ்வைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிப் பார்த்தான். ஆனால் அவன் கூறியதை யாரும் சட்டை செய்யவில்லை.

அந்த ஊரில் புராண கதா காலட்சேபம் செய்யப் பரமேசுவரர் என்பவர் வந்தார். அவர் ஒரு மாத காலத்திற்கு இராமாயணப் பிரசங்கம் செய்தார். அவரை ஊரில் எல்லோரும் புகழ்ந்தார்கள். தினமும் அவரை யாராவது அழைத்துப்போய் விருந்தும் வைத்தார்கள். ஆனந்தனும் ஒரு நாள் தன் வீட்டிற்கு வந்து சாப்பிடும்படி அழைத்தான். அவரும அவனது வீட்டிற்குச் சென்றார்.

சாப்பிட்டு முடித்ததும் அவன் பரமேசுவரரிடம் "இராமாயணத்தில் ராமர் பல கஷ்டங்களைப்பட்டதாக நீங்கள் கூறி வருகிறீர்கள். ஆனால் ராமரின் கஷ்டங்கள் அவரது குடும்ப சம்பந்தப்பட்டவை தான். தன் தந்தை கொடுத்த வாக்கை காக்க வன வாசத்தை மேற்கொண்டார். தன் மனைவியை அபகரித்தான் என்பதற்காக அவர் ராவணனுடன் போர்



புரிந்தார். இந்த மாதிரிப் பிரச்சினைகள் எல்லாக் குடும்பங்களிலும் தான் இருக்கின்றன.

ஆனால் ராமரை மகாபுருஷர் என்று வர்ணித்து வால்மீகி முனிவர் இராமாயணத்தை எழுதி உலகப் புகழ் பெற்றார்.

அதனால் எல்லோரும் ராமரைக் கடவுளாகக் கருதி வழிபடுகிறார்கள்.

எனவே சாதாரணமானவர்களைப் போற்றி ஏன் காவியங்கள் எழுதி ராமரைப் போல அவர்களையும் தெய்வப் பிறவிகளாக்கவிலலை?" என்று கேட்டான்.


பரமேசுவரரும் "நீ கேட்ட கேள்வி மிக முக்கியமானதே. இராமாயணத்தில் வரும் நிகழ்ச்சிகள்போல உலகில் எந்த நாட்டிலும் எந்தக் குடும்பத்திலும் நடைபெற்றே வருகின்றன. ராமர் அவதாரம் எடுத்தது நல்லவர்களைக் காக்கவும் கெடுதல் செய்பவர்களை அழிக்கவும் தான்.

அதனால் பகவானே ராமராக மானிட ஜென்மம் எடுத்து சாதாரண மனிதனைப் போலக் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்.

எனவே அவரை அவதார புருஷர் என வால்மீகி முனிவர் எழுதினார்.

ராமரின் சரிதத்தை வால்மீகி எழுதியதுபோல வேறு யாரும் ஒருவரைப் பற்றி எழுதி யதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் தான் ராமரை எல்லோரும் தெய்வமாகக் கருதுகிறார்கள்" என்றார்..

(தொடரும்)



## நெல்சன் மண்டேலா

இவர், 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் ஒரு மண் குடிசையில் பிறந்தார். இவரது தந்தை சோசா. பழங்குடி மக்கள் தலைவர்.

மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டே பள்ளிக்கூடத்தில் படித்தார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். 1941 ஆம் ஆண்டு பகுதி நேரத்தில் சட்டக்கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், எஸ்டேட் ஏஜென்டாகவும் வேலை பார்த்தார். நெல்சன் மண்டேலா பிறந்தபோது தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் அதன் உச்சத்தில் இருந்தது. தொன்றுதொட்டு கறுப்பர்கள்தான் தென்னாபிரிக்கா மண்ணுக்குச் சொந்தக்காரர்கள். பதினேழாம் நூற்றாண்டில் அங்கு வந்து குடியேறிய பிரெஞ்சு டச்சு நாட்டவர்களையும் ஆங்கிலேயர்களையும் வரவேற்றது தென்னாபிரிக்க மண். எண்ணிக்கை பெருக பெருக அதிகாரத்தைக் கைப்பற்றி கறுப்பினத்தவர்களை கொத்தடிமைகளாக நடத்த எத்தனித்தனர், விருந்தினர்களாக வந்த வெள்ளையர்கள். வெள்ளையர்களுக்கென்று தனி பள்ளிக்கூடங்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், கட்டடங்கள், அங்கே கறுப்பவர்களுக்கு அனுமதி கிடையாது. வெள்ளையர்கள் வாழும் பகுதியில் நடப்பதற்குக்கூட கறுப்பினத்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் மொழிகளின் பெயரால் கறுப்பர்களை பிரித்து வைத்திருந்தனர். ஆனால், வெள்ளையின ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வந்தது ANC எனப்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ். அப்போது கல்லூரி மாணவராக இருந்த நெல்சன் மண்டேலா, காங்கிரஸின் இளைஞர் பிரிவைத் தொடங்கினார்.

மண்டேலாவின் வருகைக்குப் பின்னர் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் தீவிர மடைந்தன. 1960 ஆம் ஆண்டு அமைதி யான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய கறுப்பினத்தவரின் மீது பொலிசார் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 69 பேர் கொல்லப்பட்டனர். இருபதாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். கொதித்தெழுந்த மக்கள், நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தவே ஆபிரிக்க தேசிய காங்கிரசை தடை செய்தது தென்னாபிரிக்க அரசு.

இனி அகிம்சைவழி பலன் தராது என்று நம்பிய மண்டேலாவும் அவரது நண்பர்களும் ஆயுதம் ஏந்த முடிவெடுத்து இரகசியமாக நாட்டைவிட்டு வெளியேறினர். 1962 ஆம் ஆண்டு நாடு திரும்பிய அவரை கைது செய்தது தென்னாபிரிக்க அரசு. ஆவணங்கள் இன்றி நாட்டைவிட்டு வெளியேறினார் என்றும், அரசுக்கு எதிராக கலகம் செய்தார் என்றும் கூறி அவருக்கு ஆயுள்தண்டனை விதித்து, ஒரு தீவுச்சிறையில் அடைத்தது தென்னாபிரிக்க அரசு. அடுத்த 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார் மண்டேலா . பின்னர் தென்னாபிரிக்கா அரசு அறிவித்தபடியே 11.2.1990 அன்று மாலையில் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். மண்டேலாவை வரவேற்க உலகம் முழுவதும் ஏற்பாடுகள் நடந்தன

வரலாற்று நாயகன் நெல்சன் ரோபிசலா மண்டேலா எனும் நெல்சன் மண்டேலா தனது 95 ஆவது வயதில் 05.12.2013 வியாழக்கிழமை அன்று மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவரின் இறுதிச் சடங்கின் போது அனைத்து நாட்டுத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 02.2015 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 660 - ஜிம்மு பேரரசரினால் ஜப்பான் அமைக்கப்பட்டது.
- 55 - உரோமப் பேரரசின் முடிக்குரிய பிரிட்டானிக் கஸ் உரோம் நகரில் மர்மமான முறையில் இறந்தான். நீரோ பேரரசனாவதற்கு இது வழி வகுத்தது.
- 1531 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி மன்னன் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.
- 1752 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது மருத்துவமனை பென்சில்வேனியாவில் திறக்கப்பட்டது.
- 1809 - ரொபேர்ட் ஃபுல்ட்டன் நீராவிப்படகுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1814 - நோர்வேயின் விடுதலை அறிவிக்கப்பட்டது.
- 1826 - லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகம் என்ற பெயருடன் அமைக்கப்பட்டது.
- 1873 - ஸ்பானிய உயர் நீதிமன்றம் முதலாம் அமெடியஸ் மன்னனை பதவி விலக்கி ஸ்பெயின் நாட்டைக் குடியரசாக அறிவித்தது.
- 1919 - பிரீட்ரிக் எபேர்ட் ஜேர்மனியின்ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.
- 1929 - இலாத்தரன் உடன்படிக்கை மூலமாக வத்திக்கான் நகர் உருவானது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பூக்கிட் டீமா என்ற இடத்தில் நேச நாடுகள் அணிக்கும் ஜப்பானுக்குமிடையில் சமர் நிகழ்ந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: யால்ட்டா உச்சி மாநாடு முடிவடைந்தது.
- 1964 - சீனக் குடியரசு பிரான்சுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.
- 1968 - இஸ்ரேல்-ஜோர்தான் எல்லைச் சண்டை ஆரம்பித்தது.
- 1973 - வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க் கைதிகளின் முதலாவது தொகுதியை விடுவிக்கும் நிகழ்வு வியட்நாமில் இடம்பெற்றது.
- **1990 - தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் விடுதலையானார்.**
- 1997 - டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைக்காட்டியைத் திருத்தும் நோக்கில் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2005 - ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1847 - தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், தொழிலதிபர் (இ. 1931)
- 1917 - சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர் (இ. 2007)
- 1924 - வி. வி. வைரமுத்து, நடிகமணி, ஈழத்தின் நாட்டுக்கூத்து நடிகர் (இ. 1989)
- 1964 - சேரா பேலின், அலாஸ்கா மாநில ஆளுநர்

### இறப்புகள்

- 1650 - ரேனே டெஸ்கார்ட்டஸ், தத்துவஞானி, கணித மேதை (பி. 1596)
- 1693 - ஜான் டி பிரிட்டோ, இயேசு திருச்சபை மதப்போதகர் (பி. 1647)
- 1713 - ஜகாந்தர் ஷா, முகலாய அரசன் (பி. 1664)
- 1946 - மா.சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி. 1860)
- 1973 - ஹான்ஸ் ஜென்சன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (பி. 1907)
- 1978 - ஹரி மார்ட்டின்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1904)
- 1991 - ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1922)
- 2006 - பெக்கி கிரிப்ஸ் அப்பையா, எழுத்தாளர் (பி. 1921)
- 2007 - சாகரன், தமிழிணைய ஆர்வலர் (பி. 1975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

...அடுத்தடுத்து நடக்கும் நிகழ்ச சியினால், அவர் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிப்பார்.

கடைசியில் உண்மையை ஒப் புக் கொள்வார். சரிதாவை ஏற்றுக் கொள்ளவும் முன்வருவார்.

ஆனால, "உண்மையை நீங் கள் ஒப்புக் கொண்டீர்களே, அதுவே போதும் என்று கூறிவிட்டு சரிதா வெளியேறு வார்.


அப்பாவாகவும், மகனாகவும் நடிப்பில் கொடிகட்டிப் பறந்தார் ரஜினி. இரண்டு ரஜினிகளும் நடத் திய **"மவுனயுத்தம்"**, ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

ஒரு ரஜினிக்கு மனைவியா கவும், இன்னொரு ரஜினிக்கு அம் மாவாகவும் நடித்த லட்சுமியின் நடிப்பும் பிரமாதமாக இருந்தது. சரிதாவும் சிறப்பாக நடித்திருந்தார். ரஜினியின் மகளாக விஜயசாந்தி நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்துக்கு கதை, திரை க்கதை எழுதிய பாலசந்தர், வசனம் எழுதவில்லை. அந்தப் பொறுப்பை விசுவிடம் கொடுத்தார். விசுவின் வசனம் கச்சிதமாக அமைந்திருந் தது. பாடல்களை கண்ணதாசன் எழுத, இசை அமைத்தவர் இளைய ராஜா. 1981 ஆகஸ்டு 15ஆந்தேதி வெளியான **"நெற்றிக்கண்"**, நூறு நாட்களுக்கு மேல் ஓடியது. இப்படம் தெலுங்கிலும் "டப்" செய்யப்பட்டு நன்றாக ஓடியது.

### ராணுவ வீரன்

அடுத்து ரஜினி நடித்த படம் சத்யா மூவிஸ் தயாரிப்பான **"ராணுவ வீரன்."** இந்தப் படத்தையும் எஸ்.பி. முத்துராமன்தான் டைரக்ட் செய் தார். ராணுவத்திலிருந்து ஊரு க்கு திரும்பும் ரஜினி, பல்வேறு பிரச்சி னைகளால் அவதிப்படும் பொது மக்களுக்கு உதவுவதுதான் கதை. ரஜினிகாந்த், ஆக்ஷன் ஹீரோவா கத் தோன்றி, அடிதடி சண்டைக் காட்சியில் கைதட்டல் பெற்றார். இப் போது தெலுங்குப் பட உலகின் சூப்பர் ஸ்டாராக விளங்கும் சிரஞ் சீவி, இந்தப் படத்தில் ரஜினிக்கு அடு த்த வேடத்தில் நடித்திருந்தார். மற் றும் ஸ்ரீதேவி, வசந்தா, நளினி, தேங்காய் சீனிவாசன், ஜசரி வேலன் ஆகி யோர் இடம் பெற்றிரு ந்தனர். இந்தப் படத்து க்கு திரை க்கதை அமைத்தவர் **"ஓம்சக்தி"** ஜெகதீசன். வசனம்: கிரு ஷ்ணா. வாலி, முத்துலிங்கம், புலமைப்பித்தன் ஆகியோர் எழு திய பாடல்களுக்கு, இசை: எம். எஸ். விஸ்வநாதன். 26-10-1981 இல் வெளியான இப்படமும் நூறு நாள் ஓடியது. பந்தி போட்டு சிம்மம் என்ற பெயரில் ராணுவ வீரன தெலுங்கில் "டப்" செய்யப்பட்டது.



ரஜினி- ஸ்ரேயா (படம்- சிவாஜி)

## அப்பா-மகனாக ரஜினி நடித்த "நெற்றிக்கண்"

ஏவி.எம். தயாரித்த **"போக்கிரி ராஜா"**வில், ரஜினிகாந்தும், ஸ்ரீதேவி யும் இணைந்து நடித்தனர். இந் தப்படம் 148 நாள் ஓடியது. இந்த ப்படம், "சுட்டலுன்னாரு ஜாக்ரதா" என்ற தெலுங் குப் படத்தைத் தழுவி தயாரிக்கப்பட்டது.

இந்தப்படத்துக்கு, பஞ்சு - அருணாசலம் திரைக்கதை, வசனம் எழுதினார். கண்ணதா சனும், கங்கை அமரனும் எழுதிய பாடல்களுக்கு எம்.எஸ்.விஸ்வநாதன் இசை அமைத்தார்.

### முத்துராமன்

ஏவி.எம்.மின் ஆஸ் தான டைரக்டரான எஸ். பி.முத்துராமன் டைரக்ட் செய்தார். அடிதடி நிறை ந்த படம். ரஜினிக்கு ஏற்ற கதை. இரட்டை வேடம். ஆக்ஷன் ஹீரோவாக ரசிகர்களைக் கவர்ந் தார்.

இப்படத்தில் ரஜினி யுடன் ஸ்ரீதேவி, ராதிகா, மனோரமா, தாம்பரம் லலிதா, முத்துராமன், ஒய்.ஜி. மகே ந்திரன், அசோகன் நடித்தனர்.

1982 பொங்கலுக்கு வெளிவந்த இந்தப்படம், 148 நாள் ஓடியது.

### பேச்சுத்திறமை

இந்தக் காலக்கட்டத்தில் ரஜினி எப்படி இருந்தார் என்பது பற்றி ஏவி.எம்.சரவணன் கூறியதாவது:-

"இப்போதெல்லாம் மேடை களில் ரஜினி பிரமாதமாகப் பேசு கிறார். ஆரம்பத்தில் பொது நிகழ்ச் சிகளில் பேசவே கூச்சப்பட்டு, மறுத்து விடுவார்.

எங்கள் தயாரிப்பான **"போக் கிரி ராஜா"** படத்தின் வெற்றி விழாவில் பேசவேண்டும் என்று ரஜினியிடம் முன்கூட்டியே சொன்ன போது அவர் தயங்கி மறுத்து விட டார்.

இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் அவரிடம், பயப்படாதீங்க.


நீங்கள் என்ன பேசவேண்டும் என்று நான் காகிதத்தில் எழுதிக் கொடுத்து விடுகிறேன். அதை அப் படியே படித்துவிடுங்கள் என்று தைரிய மூட்ட, ரஜினி பேச ஒப்புக் கொண்டார்.

### பேச்சுத்திறன்

எழுதிக்கொடுத்த பேச்சை, நிக ழ்ச்சியின்போது ஓர் ஐந்துக்குத் தான் படித்திருப்பார்.

அவ்வளவு தான். அதன் பிறகு, பேச்சு எழுதப்பட்ட பேப்பரை மடித்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, தானே தன்னிச்சையாகப் பேச ஆரம்பித்து விட்டார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 75

வீண்போகுமா தகப்பன் செஞ்ச தர்மம்? வா வந்து என் வீட்ல இரு.

அவ ஒண்ணும் பேசல.

கண்ணத் தொடச்ச முந்தானைய வாயில சுருட்டி வச்சுத் தணிஞ்சு தரை பாத்திருந்தா.

இப்பச் சுப்பஞ்செட்டியார் பேசு றாரு.

எனக்குப் பொட்டப்புள்ளைக ரெண்டு இல்ல; மூணுன்னு நெனச்சுக் கிறேன் தாயி.

இது ஒனக்குத் தாய்வீடு என்வீடு தகப்பன் வீடுன்னு நெனச்சுக்க.

இப்பச் சொல்றேன் எல்லாரும்; கேட்டுக்குங்க.

என் மூத்தமக கழுத்துல கெடக்கே மூணு பவுன்சங்கிலி அது என் தங்கச்சி பெரியமூக்கி மொறக்கடனாகக் குடு த்தது.

அந்தச் சங்கிலி கழுத்துல ஏறல ன்னா எம் மக கழுத்துல தாலி ஏறியி ருக்காது.

கருவாச்சி கல்யாணத்துக்கு வந்து பெரியமூக்கி சங்கிலியத் திருப்பிக் கேட்டா.

சங்கிலி எறங்கினா அவ கழுத்துல தாலியும் எறங்கிரும் தாயின்னு கை யெடுத்துக் கும்புட் டேன்.

பொழைச்சுக் கெடந்தாக் குடுங் கன்னு போயி ட்டா.

அந்தத் தர்மசீலி பெத்த மகள நாங்க தவிக்க விட் ருவோமா.

என் நெஞ்சுக் கூட்ல உசுரு இரு க்க வரைக்கும் நெல்லுச் சோறா போடறேன்.... வாம்மா.

இதுக்கும் அவ ஒண்ணும் பேசல.

ஆத்தா பெருமை சொல்லவும் கட கடன்னு கொட் டுது கண்ணீரு.

அதுக்கு மேல பொறுக்க முடியல மொதலக்கம்பட்டி ஆளுகளுக்கு.



ஆளாளுக்கு ஒண்ணு சொன்னா எப்பிடி?

நடக்கற கதையைப் பேசுங்கப்பா.

தாய்வழிச் சொந்தம்ன்னு நாங்க குத்துக் கல்லுமாதிரி குத்த வச்சிருக்க அவ ஒங்க வீட்ல வந்து இருந்தா ஊர் ஒப்புமா? ஒண்ணு அவ இதே வீட்ல இருந்து பொழைக்கணும். இல்ல எங்க வீட்ல வந்து இருக்கணும். அதான் மொற.

மொதலக்கம்பட்டி ஆளுக கோப மாச் சொன்னாலும் நியாயமா இரு ந்துச்சு.

முந்தானையில ஒரு முடிச்சுப் போடறது அவுக்கிறது.

இன்னொரு முடிச்சுப் போடறது அவுக்கிறது.

இப்படி முடிச்சுப் போடுறதும் அவுக்கிறதுமா இருந்த கருவாச்சி ஒரு முடிவுக்கு வந்துட்டா.

ஒரு தகப்பனும் ஒரு தாயும் செத் துப் போனதுக்கு நீங்க இத்தன தகப் பனும் தாயுமா இருக்கீக.

நீங்க தெம்பு தெறம் சொல்லச் சொல்ல எனக்கு அழுகையா வருது.

ஆத்தா சொல்லுவா.

பறக்கப் பல காடு இருக்க ஒரு கூடுன்னு.

இந்த வீடுதான் அந்தக் கூடு.

இந்த வீட்ட விட்டு எப்படி நான் வெளியேற முடியும்?

ஆத்தா வாசன இந்த வீடெல்லாம் நெறைஞ்சு நிக்குது.

எங்க தொட்டாலும் அவ சத்தமா வருது.

இந்த வீடு இருக்கிற வரைக்கும் ஆத்தா சாகல.

அவ இந்த வீட்டுக்குள்ள இருக்கா.

அவ கூட நான் இருக்கப் போறேன்.

தவிரவும் நான் இந்த வீட்ட விட்டு வெளியேறிட்டேன்னு வச்சுக்குங்க.. கரையான் கட்ன வீட்டுல கருநாகம் புகுந்திரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ. சைக்கிள் வழங்கலில் பாரபட்சம்; வடமாகாண முதலமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

களப்பணிகளில் ஈடுபடும் வடக்கு மாகாண பொதுச்சேவை அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்குதலில் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

களப்பணிகளில் ஈடுபடும் வடக்கு மாகாண பொதுச்சேவை அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வின் போது வடக்கு மாகாணத்தில் வினைத்திறனுடன் களப்பணிகளில் ஈடுபடும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அவை வழங்கப்படவில்லை.

ஆனால் மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொள்ள விரும்பும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலை பிரதம செயலாளர் அலுவலகம் (2014.11.11 ஆம் திகதிய கடிதம்) கோரியிருந்தும் இன்று வரை அவை தொடர்பாக எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதை தயவுடன் தங்களுக்கு மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தங்களது மேலான கவனத்திற்கு கீழ்வரும் விடயங்களை கொண்டு வருகின்றோம்.

மத்திய அரசின் கீழ் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (புதிய நியமனம் பெற்றவர்கள்) அனைவருக்கும் மோட்டார் சைக்கிள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. சுமார் 10 வருடங்களாக வடமாகாணத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட சூழலில் கடமையாற்றும் எமக்கு இவை கிடைக்காதமையினால் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சுற்றுநிருபத்தில் உள்வாங்கப்பட்டிருந்தும் வடமாகாணத்தில் கடமையாற்றும் மேற்படி உத்தியோகத்தர்களின் தெரிவுகள் காலதாமதம் ஆகியே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதித் தேர்தல்-2015 இற்கு முன்பு இவை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தும் பின்பு வழங்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை அவை தொடர்பான எதுவித முன்னேற்றமும் காணப்படாமை குறித்து மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டது தொடர்பில் தொடர்ந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வற்வரி மோசடி தண்டனையை உடனடியாக அமுல்படுத்தவும்

தெற்காசியாவில் ஆகக்கூடுதலான 400கோடி ரூபா வற்வரி மோசடியுடன் தொடர்புடைய வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கும் வழங்கப்பட்டுள்ள தண்டனையை அமுல்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா தென்னக்கோன், நேற்று செவ்வாய்க்கிழமை பணித்துள்ளார்.

வற்வரி மோசடியுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த இருவர் மலேசியாவில் தலைமறைவாகவிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர்.

அவ்விருவருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வற்வரி மோசடி வழக்கில் இருவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு இருவருக்கும் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த தீர்ப்பையே அமுல்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முஹமது முர்ஷீட் என்பவருக்கு 260 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் 6.3 மில்லியன் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கின் மற்றொரு குற்றவாளியான நாகூர் மொஹமட் நையிம் என்பவருக்கு 120 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் 2.4 பில்லியன் ரூபா சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியத்தால் பல கோரிக்கைகளுடன் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடித்தத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட அரச பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நாம் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றோம்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர். என்ற பெயரைக் கொண்டிருந்தாலும் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனால் முழு நேரமாகவே எமது கற்பித்தலை மேற்கொள்ளுகின்றோம் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். பகுதி நேர ஆசிரியர்களாகக் கடமையாற்றும் நாம் மிகவும் இளமை மற்றும் ஆங்கில மொழியில் திறமையுடையவர்களாகவும் காணப்படுகின்றோம்.

வலயக்கல்வி அலுவலகங்களினால் நடத்தப்படுகின்ற அனைத்துச் செயலமர்வுகளிலும் பங்குபற்றி அதனை எமது பாடசாலைகளிலும் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றோம். இதனை மதிப்பிற்குரிய தங்கள் வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களூடாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

அண்மைக்காலங்களில் எம்மில் பெரும்பாலானோர் இல்லற வாழ்வில் இணைந்து குடும்பத் தலைவர்களாக இருக்கின்றோம். எமது கொடுப்பனவைக் கொண்டு குடும்ப வாழ்வை நடத்த முடியாத இக்கட்டான நிலையில் நாம் இன்று காணப்படுகின்றோம்.

எனவே தாங்கள் எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்க ஆவன செய்யுமாறு மிகவும் தாழ் மையுடன்கேட்டுக் கொள்கின்றோம். ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை, எமது திறமை மற்றும் வயது ஆகியவற்றை முதன்மைப்படுத்தி நேரடியாக எமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

யாழ்.மாவட்டத்தில் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையான பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் காணப்படுவதாலும் எமது தரவுகள் அனைத்தும் மாகாண கல்வி அமைச்சினால் பேணப்படுவதாலும் எமது நிரந்தர நியமனத்தை உடன் வழங்க தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கண்டங்கத்தரி

Botanical Name-Solanum xantho carpum
Family-Solanaceae
Engl-Yellow berried night shade
Sinh-katuwel- batu



ஓராண்டு வளரக்கூடிய இக் கொடி சுமார் 100 செ.மீற்றர் தூரம் வரைக்கும் நன்கு அடர்த்தியாக தரையோடு ஒட்டிப்படரும். அழுத்தமுள்ள கொடிகளில் சுமார் 6-12 செ.மீற்றர் நீளமுள்ள 3-6 செ. மீற்றர் அகலமுள்ளதனி, ஒன்று விட்ட, நீள்வட்ட சமமான இரு விளிம்புகளுள்ள இலைகள் நெருக்கமானவையாக இருக்கின்றன. இலையின் இருபுறங்களிலும் கொடி, காம்பு ஆகிய எல்லாவற்றிலும் சுமார் ஒரு செ.மீற்றர் நீளமுள்ள பிரகாசமான மஞ்சள் நிறமுட்கள் ஏராளமாக நிறைந்திருப்பதைக் காணலாம். பூக்கள் 5 பிரிவாகத் தெரியும். ஒரே இதழுடைய ஊதா நிறமானவை. வட்டவடிவ காயின் சாம்பல் நிறத்தோலில் பல பச்சை நிறக்கோடுகள் காணப்படும். விதைகள் அதிகமுடைய மஞ்சள் நிறப் பழங்கள். வருடம் முழுவதும் பூக்கக்கூடியவை.

தரிசு நிலங்களில் பெரும்பாலும் மணல் மண்ணில் பரம்பல் அதிகம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். கடற்கரையை ஒட்டிய மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும்.

சுவாச நோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். காய், பழங்களை சமைத்தும் வற்றல் போட்டும் உண்ணலாம்.

கண்டங்கத்தரி இலையைக் கொண்டு வந்து முட்களை நீக்கி விட்டு அம்மியில் வைத்து நைத்து சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி சாற்றைச் சுத்தமான துணியில் வடிகட்டி அதேயளவு தேன் சேர்த்து காலை, மாலை 3 நாட்கள் உட்கொள்ள இருமல் தீரும். அத்துடன் சிறுநீர் நன்கு கழியும்.

கால்களில் ஏற்படும் பித்த வெடிப்புக்கு 10 கண்டங்கத்தரி இலைகளை எடுத்து அதை ஒரு சட்டியில் போட்டு அரை டம்ளர் (100 மில்லி) அளவு தேங்காய் எண்ணெயை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் இலை வெந்து கருகும். அந்தச் சமயம் இறக்கி எண்ணெயை வடிகட்டி ஒருசீசாவில் விட்டு வைத்துக் கொள்ளவும். இரவுபடுக்க முன்பு கால்களிலுள்ள வெடிப்புக்களின் மேல் தடவி வந்தால் வெடிப்புகள் ஆறி மறைய ஆரம்பிக்கும். ஆறும் வரை மருந்தைப்பூசலாம்.

இதன் முழுச்செடியையும் நிழலில் உலர்த்தி இடித்து அரித்து 1- 2 கிராம் தேனுடன் காலை, மாலை 7 நாட்கள் உட்கொள்ள இருமல், கசம், ஆஸ்துமா குணமாகும்.

இச்செடியை குடிநீர் செய்து 30-60 மில்லி காலை, மாலை கொடுக்க நாட்பட்ட இருமல் தணியும்.

இதன் பழங்களை குழைய வேக வைத்து கடைந்து வடிகட்டி எடுத்த அளவு ஒரு பங்கு அதேயளவு நெய் சேர்த்து காய்ச்சி கடுகு திரளும் பருவத்தில் வடித்து வெண்குட்டத்தின் மீது பூசிவர வெள்ளைப்புள்ளிகள் படிப்படியாக மறையும்.

இதன் விதைகளை எரித்து அதினின்று வரும் புகையை பிடிக்கப் பல்வலி குணமாகும்.

இதன்வேரை குடிநீரிலிட்டு 30-60 மில்லி அளவு திப்பிலிப்பொடி 2 கிராம் சேர்த்து தேன்கலந்து கொடுக்க இருமல், பீனிசம் நீங்கும்.

கண்டங்கத்தரி வற்றல்

மோர்- அரை லீற்றர், கண்டங்கத்தரி- ஒரு கிலோ, மஞ்சள் பொடி- 10 கிராம், மிளகு-20 கிராம், உப்பு- தேவையானளவு

மோரில் உப்புப்போட்டு, மஞ்சள் பொடிபோட்டுமிளகைத்தூள்செய்து போட்டு கண்டங்கத்தரிக்காயை ஒரு பக்கத்தில் இலேசாகக்கீறி மோரில் போட்டு இரண்டு நாட்கள் ஊறவிடவும். மறுநாள் எடுத்துக் காயவைத்து வறுத்து உணவுடன் தொட்டுக்கொண்டு சாப்பிடவும். இதனால் கசம், இருமல், பீனிசம், காய்ச்சல் ஆகியன நீங்கும்.

இதன் இலைச்சாற்றில் அல்லது குடிநீரிட்டு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பூசி வர தலைவலி நீங்கும்.

இதன் இலைச்சாற்றில் ஆழி நெய் சேர்த்துகாய்ச்சி பித்த வெடிப்புகளுக்குப்பூச அவை இலகுவில் ஆறும்.

கண்டங்கத்தரி வேர், சிறு தேக்கு வேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவற்றை ஒரேயளவாக எடுத்து 4 மடங்கு நீர்விட்டு கால் பங்பாக குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை குடிக்க உடல்வலியுடன் கூடிய காய்ச்சல் நீங்கும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கும் செலவை ஏற்கத்தயார்

## தமிழக அரசு அறிவிப்பு

தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க, சட்டத்தரணிகளை நியமித்து அதற்கான செலவை, தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று, இலங்கையிலுள்ள இந்திய தூதருக்கு, தமிழக மீன்வளத்துறை செயலர் விஜயகுமார், கடிதம் எழுதியுள்ளார். அதில், அவர் கூறியிருப்பதாவது,

முன்பெல்லாம், கைதான மீனவர்களை விடுவிக்கும்போது, அவரகளின் படகுகளும் விடுவிக்கப்படும். இதன்மூலம், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருந்தது. அதேபோல், படகுகளை, எந்தவித நிபந்தனையுமின்றி, நீதிமன்றில் விண்ணப்பம் அளிக்க வேண்டும் என வற்புறுத்தாமல் விடுவிக்கும்படி, மீண்டும் ஒருமுறை, இலங்கை அதிகாரிகளிடம் வலியுறுத்தும்படி, தமிழக அரசு கேட்டுக் கொள்கிறது. அவ்வாறு விடுவிக்க முடியாவிட்டால், இலங்கை நீதிமன்றத்தில், முறைப்படி விண்ணப்பித்து, படகுகளை விடுவிக்க, தேவையான சட்டத்தரணிகளை நியமிக்க, நடவடிக்கை எடுகக வும். அதற்கான செலவுகளை, தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும். இப்பணிகளை கவனிக்க, படகு உரிமையாளர்கள் சார்பில், இராமேஸ்வரம் மீன்வளத்துறை உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் படகை விடுவிக்கும் பணியை மேற்கொள்வர். படகுகளை விரைவாக விடுவிக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி, உங்களை கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு, அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோடீஸ்வரர்களுக்கு வக்காளத்து ஏன்?**

இது குறித்து, பா.ஜ.க, மூத்த தலைவரும், ஏற்கனவே மீனவர்களையும், படகுகளையும் மீட்பதற்காக முயற்சித்த சுப்பிரமணியன் சுவாமி கூறியதாவது, இந்தப் பிரச்சினையில், தமிழக அரசு தரப்பில் திடீர் என ஆர்வம் காட்டுவதன் பின்னணியில், முழுக்க முழுக்க அரசியல் இருக்கிறது.

தமிழக அரசு எதிர்பார்ப்பது போல, மீனவர்களின் படகுகளை அவ்வளவு எளிதாக விடுவிக்க முடியாது. அங்கே, மீனவர்கள் பிரச்சினைகளை தீர்க்கும் முடிவில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்ததால், தமிழக மீனவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் தான் ஏற்படும். தமிழக அரசைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் இருந்தே, கோடிக்கணக்கான மதிப்பிலான படகுகளுக்கு சொந்தக்காரர்கள் யார் என்பதை மறைக்கின்றனர்.

கோடீஸ்வரர்களான அவர்களுக்காக, தமிழக அரசு ஏன் வழக்கு செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது. நான் ஆரம்பத்தில் இருந்து சொல்லி வருவது என்ன? பிடிபட்ட படகுகளில் பல, தமிழகத்தைச் சேர்ந்த புள்ளிகளுக்கு சொந்தமானவை என்பது. ஆனால், அதை ஊர்ஜிதப்படுத்துவதைப் போல, இன்று வரை, தமிழக அரசு அது தொடர்பான தகவல்களை வெளியிடவில்லை. இந்த தகவலை சொன்னதற்காக, என் மீது மான நஷ்ட வழக்கைத் தான் தொடர்ந்தனர். இப்போது, அவர்களுக்கு ஆதரவாக படகுகளை மீட்க, இலங்கை நீதிமன்றத்தில் வக்காளத்து போட முன்வந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவத்தார். (இ-5)

# பேசும் படம் - 23




Mortein க்கே நுளம்பு குத்துதே! என்ன கொடுமை சரவணா?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
எல்.தனுஸ்
கபிலன் ரவல்ஸ்

**மைத்திரி,ரணில்,சம்பந்தன்**

# சூழ்ச்சி கூட்டணியே தேசிய அரசாங்கம்

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு

**(கொழும்பு)**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தமிழ் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரின் சூழ்ச்சிக் கூட்டணியே தேசிய அரசாங்கம். தேசிய அரசாங்கம் தொடருமாயின் புலம்பெயர் அமைப்புக்களுக்கே வாய்ப்பாக அமையுமென குற்றம் சுமத்தும் தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில சதிகார கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சிகளின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூலகத்தில் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியிலிருந்து பிரதான உறுப்பினர்களை வெளியெடுத்து தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதென்பது மக்களின் ஆட்சியினை நடத்தவோ அல்லது தேசியத்தினை கட்டியெழுப்பவோ அல்ல. இக்கூட்டணி பிரிவினை வாதக் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என பிரிவினைகட்சிகள் ஒன்றிணைந்து சர்வதேசத்தின் தேவையினை பூர்த்தி செய்யவே தேசிய அரசாங்கத்தினை உருவாக்கியுள்ளன. இதனால் மக்களின் பிரச்சினைகளோ அல்லது தேசிய பிரச்சினையோ தீர்ப்போவதில்லை.

இந்த அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோரின் தீர்மானங்களே பிரதானமானவை. சர்வதேச சக்திகளை திருப்திப்படுத்தவும் புலம்பெயர் அமைப்புக்களின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யவுமே இத் தேசிய அரசாங்கம் முயற்சிக்கின்றது. எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த தேசிய அரசாங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து பலமானதொரு கட்சியினை உருவாக்க வேண்டும். இச் சதிகாரக் கூட்டணியின் சூழ்ச்சித் திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களை காப்பாற்ற வேண்டும்.

அதற்காக சகல முயற்சிகளையும் நாம் கூட்டாக எடுத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகளுடன் இணைந்து செயற்பட உறுமயவுக்கு அழைப்பு



எதிர்வரும் பொது தேர்தலில் தம்முடன் இணைந்து போட்டியிடுவதற்கு பிரதான இரு கட்சிகளும், ஜாதிக ஹெல உறுமயவிற்கு அழைப்பு விடுத்துள்ளதாக அக்கட்சியின் ஊடக செயலாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கடந்த நாட்களில் இவ்வாறான வேண்டுக்கோள் ஒன்றினை முன்வைத்துள்ளதாகவும். இரு கட்சிகளின் கீழ் போட்டியிடுமாறு வேண்டுகோள்களில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய பொது தேர்தலில் எடுக்க வேண்டிய மூன்று சந்தர்ப்பங்கள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைய கட்சியாக போட்டியிடுவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவது, அல்லது ஐக்கிய தேசிய கட்சியின் பிரதான கூட்டணியின் கீழ் போட்டியிடுவது போன்ற சந்தர்ப்பங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

தேர்தல் நாட்களை அறிவித்ததன் பின்னர் நாட்டில் இடம் பெறும் அரசியல் சூழ்நிலைகளை கவனத்திற்கு கொண்டுவந்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தீர்மானங்கள் எடுப்பதாக வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (இ-5)

# மனித முகத்துடன் பிறந்த பன்றிக்குட்டி

சீனாவின், நானிங் நகரில் மனித முகத்தின் தோற்றத்தை யொத்த விகாரமடைந்த முகத்துடன் கூடிய பன்றிக் குட்டியொன்று பிறந்துள்ளது.

எனினும் பிறந்து சில நாட்களுக்கு பின்னர் இப் பன்றிக்குட்டி உயிரிழந்துள்ளது. குட்டியின் தாய் அதற்கு பாலூட்ட மறுத்து ஒதுக்கியமையே இதற்கான காரணம் என இப்பன்றிக் குட்டி பிறந்த பண்ணை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன் படங்கள் தற்போது இணையத்தில் வலம் வருவதுடன் பன்றிக் குட்டியை விலைக்கு வாங்க பலர் போட்டி போட்டு வந்ததாக பண்ணை உரிமையாளர் தெரிவித்துள்ளார். (இ-5)



# குமார் குணரத்தினத்தை நாடு கடத்த உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை

(கொழும்பு)

முன்னிலை சோஷலிச கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் குமார் குணரத்தினத்தை நாடு கடத்த வேண்டாம் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குமார் குணரத்தினத்தை கைது செய்து நாடு கடத்த பொலிஸார் தயாராகி வருவதாக தகவல் கிடைத்துள்ளதெனவும் அவ்வாறு செய்வது சட்டவிரோத செயல் என உத்தரவிடும்படியும் முன்னிலை சோஷலிச கட்சி நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

குறித்த மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம், குமார் குணரத்தினத்தை எதிர்வரும் 13ஆம் திகதி வரை நாடு கடத்த வேண்டாமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் குமார் குணரத்தினத்தை 13ஆம் திகதிவரை நாடு கடத்தக் கூடாதெனவும் 13ஆம் திகதி நீதிமன்றில் கருத்து முன்வைக்குமாறும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதால் குமார் குணரத்தினத்தை கைது செய்யுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் நம்பிக்கையைப் பாதுகாக்குமா?



கடந்த அரசாங்கத்தின் தலைவர்களும் அதிகாரிகளும் செய்த ஊழல்கள், மோசடிகள் பற்றி லஞ்ச, ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் கடந்த சில வாரங்களில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையை அவதானிக்கும் போது, இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

தேசபக்தர்கள் என்றும் சிங்கள மக்களின பாதுகாவலர்கள் என்றும் கூறிக்கொண்டிருந்த முன்னாள் அரசாங்கத்தின் தலைவர்கள், காட்டாட்சியையே நடத்தியிருக்கிறார்கள் போலும். இரண்டாவது, இந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது அவற்றில் பெரும்பாலானவை விசாரணையின்றியே மறக்கப்பட்டுவிடலாம் என்பது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தோல்வியடைந்ததன் பின்னர் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளைப் பார்த்தால் பிலிப்பைன்ஸில் மார்கோஸினதும் எகிப்தில் முபாரக்கினதும் டியூனீசியாவில் பென் அலியினதும் ஆட்சியே எவருக்கும் நினைவுக்கு வரும். இந்த செய்திகள் உண்மையாக இருந்தால் தேசப்பற்றின் பெயரால் முன்னாள் ஆட்சியாளர்கள எந்தளவு பாரிய மோசமான ஊழல்களை மூடி மறைத்துக்கொண்டு இருந்தார்கள் என்று எவரும் வியப்படையவே செய்வார்கள.

மறைத்து வைக்கப்பட்டிருந்த யானைக் குட்டிகள் நாளாந்தம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் தம்மிடம் இருந்த இரண்டு யானைக் குட்டிகளை அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

ஆங்காங்கே கைவிடப்பட்ட கோடிக் கணக்கு ரூபாய்கள் பெறுமதியான சொகுசு வாகனங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. சமையலறை வசதிகளும் உள்ள இரண்டு பஸ்களும் அண்மையில் கண்டெடுக்கப்பட்டன. சந்தேகத்திற்கிடமான ஆயுத கொள்கலன்களும் ஆயுதக் கப்பல்களும் கண்டெடுக்கப்படுகின்றன. ஆயிரம் கிலோ ஹெரோயினை இலங்கைக்கு கொண்டு வந்ததாகக் கூறப்படும் வெலே சுதா என்ற சந்தேகநபருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மட்டுமன்றி முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன.

பாரிய ஊழல்கள் தொடர்பாக எதிர்க் கட்சிகளினால் குற்றஞ்சாட்டப்பட்ட மஹிந்தவின் சகோதரரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். அதேபோல், குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவும் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிட்டார். வெலே சுதா என்ற போதைப்பொருள் வர்த்தகரினால் பெயர் குறிப்பிடப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபரும் தப்பிச் சென்றுவிட்டார்.

ஒரு சிலர் சம்பந்தமாக மட்டுமே அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுத்துள்ளது. ஊழல் மோசடி சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வெலே சுதாவின் வாக்குமூலத்தில் பெயர் குறிப்பிடப்பட்டதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஆகியோர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதோடு, சுமார் முப்பது ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி வந்த கே.பி என்றழைக்கப்படும் செல்வராசா குமரன் பத்மநாதனின் கடவுச் சீட்டையும் கைப்பற்றுமாறு நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது. இதனை தமிழ் மக்களும் பாராட்டியிருப்பார்கள். ஆனால், அது ஊழல் சம்பந்தமான விடயம் அல்ல.

ஊழல் பேர்வழிகளை மடக்கிப்பிடித்து அவர்கள் கொள்ளையடித்த மக்களின் பணத்தை மீண்டும் பெற்றுக்கொண்டு மக்களுக்கு சலுகைகளையும் நிவாரணைங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால்லஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் போதிய வளங்கள் இல்லை என்று கடந்த ஆட்சியின் போதே கூறப்பட்டது. எனவே, தற்போது ஆணைக்குழுவிடம் குவிந்துள்ள குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது ஆணைக்குழு இந்தக் குற்றச்சாட்டுக்களை எப்போது விசாரித்து முடிக்கும் என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை, இந்த ஆணைக்குழுவின் சில அதிகாரிகளுக்கு எதிராகவும் கடந்த காலத்தில் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனவே, குவிந்துள்ள குற்றச்சாட்டுக்களை இந்த ஆணைக்குழு விசாரித்து முடிக்குமா என்ற கேள்வி மீண்டும் எழுகிறது. அது ஒருபுறமிருக்க, இப்போது ஜனாதிபதி சிறிசேனவின் அரசாங்கம், ஜனநாயகத்துக்காக எடுத்த சில நடவடிக்கைகள் காரணமாக நாட்டிற்குள்ளும் சர்வதேச ரீதியிலும் பாராட்டுக்களைப் பெற்று வருகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பும் அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக இருப்பதாக தெரிகிறது.

இந்த நிலையில் தற்போதைய எதிர்க்கட்சிகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கின்றன. அவர்களால் அரசாங்கத்தை விமர்சிக்கவும் முடியாது. அதனை ஆதரிக்கவும் முடியாது. கூடுதலாக ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்களைக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தை விமர்சிக்காமல் இருந்தால் அவர்கள் அடுத்த பொதுத் தேர்தலை எதிர்நோக்க முடியாது. அரசாங்கத்தின் குறைகளை காணாது மக்களை மீண்டும் தம்பக்கம் வென்றெடுக்க முடியாது. ஆனால், அரசாங்கத்தின் தலைவராக இருப்பவர் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் என்பதால் அவர்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கவும் முடியாது.

உதாரணமாக இம்முறை வரவு - செலவுத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த வரவு - செலவு திட்டத்தால் மக்களுக்கு பெருமளவு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே எதிர்க்கட்சிகள் அதனை விமர்சிக்க முடியாது. அதனை விமர்சிக்காது மக்களை வென்றெடுக்கவும் முடியாது. ஆனால் இது ஜனாதிபதி சிறிசேன, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதியளித்த வரவு - செலவு திட்டமாகும். அவர் இப்போது பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக இருக்கிறார். அதனாலும் எதிர்க்கட்சிகள் அதனை விமர்சிக்க முடியாது.

எனவே, இப்போது அரசாங்கத்தை விமர்சிக்கும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருக்கும் சிறு கட்சிகளான தினேஷ் குணவர்தனவின் ஐக்கிய மக்கள் முன்னணி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் ஏற்றுள்ளன. அதேவேளை அவர்கள் மஹிந்தவை மீண்டும் பதவியில் அமர்த்த உத்திகளையும் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் ஐ.ம.சு.மு.வில் இருக்கும் வாசுதேவ நாணயக்காரவின் கட்சி போன்றவற்றோடு இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க முயற்சிப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. அவ்வாறானதோர் முயற்சி நிச்சயமாக சிறுபான்மை மக்களுக்கு எதிரானதாகவே கருத வேண்டியுள்ளது. தென்பகுதி மக்கள் தற்போதைய அரசாங்கம் தொடர்பாக மகிழ்ச்சியுறுவதற்கு முக்கிய காரணம் கடந்த 29 ஆம் திகதி நிதி அமைச்சர் சமர்ப்பித்த குட்டி வரவு-செலவு திட்டமாகத்தான் இருக்க வேண்டும். இது எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை நோக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்ட வரவு-செலவு திட்டம் என விமல் வீரவன்ச கூறியிருந்தார். சிலவேளை இது உண்மையாகவும் கூடும்.

ஆனால், கடந்த அரசாங்கம் தேர்தல்களை முன்னிட்டே விலைவாசியை குறைத்ததைப் போல இந்த அரசாங்கமும் விலைவாசியை குறைப்பதாக கூறுவது அவ்வளவு நியாயமில்லை. ஏனெனில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதே சலுகைகளை வழங்க இதுபோன்ற வரவு-செலவு திட்டமொன்றை முன்வைப்பதாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் விக்ரமசிங்கவும் கூறியிருந்தனர். ஆனால், எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து, இதே அரசாங்கம் பதவிக்கு வந்து விலைவாசியை அதிகரித்தால் வீரவன்ச கூறுவது உண்மையாகிவிடும். அரசியலில் எதனையும் எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்கள் இந்த அரசாங்கம் தொடர்பாக மகிழ்ச்சியடைய போதிய காரணங்கள் இருக்கின்றன. கடந்த அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தில் வடபகுதி அரசியல்வாதிகள், படையதிகாரிகளை ஆளுநராக நியமிக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டனர். ஆனால் அப்போதிருந்த மஹிந்த அரசாங்கம் அதனை நிறைவேற்றவில்லை. வடமாகாண சபை முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஜனாபதிபதி மஹிந்த அது தொடர்பாக வாக்குறுதியளித்திருந்தார். ஆனால், அவர் அதனை நிறைவேற்றவில்லை.

புதிய அரசாங்கம் சகல மாகாண ஆளுநர்களையும் மாற்றும்போது அதனை நிறைவேற்றியது. அதேபோல், வடமாகாணசபையின் பிரதம செயலாளருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பெரும்பாலான மாகாண அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டமையினால் அவர்களது அந்த கோரிக்கையும் நிறைவேறியது. அமைச்சரவைக்கு அப்பால் தேசிய கொள்கை வகுப்புக்காக புதிய அரசாங்கம் தேசிய நிறைவேற்றுச் சபை என்றதோர் சபையை அமைத்துள்ளது. அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். இவை அனைத்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு கிடைத்த அங்கீகாரங்களாகும். ஜனாதிபதி சிறிசேனவின் சுதந்திர தின உரையையும் நிச்சயமாக தமிழ் மக்கள் விரும்பியிருப்பார்கள்.

ஆனால், அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி தொடர்ந்தும் மக்கள் மகிழ்ச்சியடையும் வகையிலேயே நிகழ்வுகள் இடம்பெறுமா என்பதே இப்போது மக்கள் முன் உள்ள கேள்வியாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கடந்த அரசாங்கத்தை விட இந்த அரசாங்கத்தைப் பற்றி நம்பிக்கை வைக்கலாம். ஏனெனில், மஹிந்த அரசாங்கம்தான் இலங்கை வரலாற்றில் பதவிக்கு வந்த படுமோசமான இனவாத அரசாங்கம். இந்த அரசாங்கம் மிக இலகுவாக வட மாகாண ஆளுநரை மாற்றிய போதும் மஹிந்த, இனவாத ஆணவத்தின் காரணமாக அதனை செய்யவில்லை. அதனை செய்திருந்தால் சிங்கள மக்கள் அவருக்கு எதிராக செயற்பட்டிருப்பார்கள் என்று கூறவும் முடியாது.

ரணிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் தற்போதைய அரசாங்கத்தை உண்மையிலேயே வழிநடத்துபவர்கள். அவர்கள் மஹிந்தவைப் போன்ற இனவாதிகளல்லர். அதாவது, அவர்கள் தமிழ் மக்களை மையமாக வைத்து முடிவுகள் எடுப்பவர்கள் என்பதல்ல. ஆனால் ராஜபக்ச குடும்பத்தோடு ஒப்பிடுகையில் இவர்கள் எவ்வளவோ சிறந்தவர்கள். ஆனால் அரசாங்கம் எதிர் காலத்தில் பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கும்போது அதனால் மக்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும் என்று அரசாங்கம் கருதும் போது நாம் எதிர்ப்பாராதவையும் இடம்பெறலாம்.

விரைவில பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறும் என்பதே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கிறது. புதிய அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் முடிவடைந்தவுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றே பிரதமர் விக்ரமசிங்க அண்மையில் கூறியிருந்தார். அதேவேளை, பொதுச் சமாதானம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்துள்ள நம்பிகக்கையில்லா பிரேரணை யில் அரசாங்கம் தோல்வியடைந்தால் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிகொத்தாவில் நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தின் போது கூறியிருக்கிறார்.

புதிய அரசாங்கத்தில் குறைப்பாடுகள் இருக்கலாம். ஆனால் சிறுபான்மை மக்கள் கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் இருந்ததைப் போலல்லாது ஒருவித நிம்மதியுடன் இருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். எனவே, திடீரென பொதுத் தேர்தல் நடைபெற்றால் கடந்த ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் இருந்த நிலைமை மீண்டும் ஏற்படாதிருக்கும் வகையில் சிறுபான்மையினக் கட்சிகள் செயற்பட வேண்டியுள்ளது. அது சிக்கலான முடிவாவது நிச்சயம். ஏனெனில் சிறுபான்மை மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்த ஜனாதிபதி சிறிசேன, பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு தலைமை தாங்குகிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அம்மக்கள் விரும்பிய ஐ.தே.க., அவரது கட்சிக்கு எதிராக போட்டியிடப் போகிறது.

-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ராஜபக்ஷவே முதலாவது குற்றவாளி

## சம்பிக்க குற்றச்சாட்டு



**முன்னைய அரசில் இடம்பெற்ற பாரிய கொள்ளைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும். அவரே முதலாவது குற்றவாளி. குறித்த அரசின் நிதி துறைமுக விமான சேவை அமைச்சின் ஊழல் மோசடிகளுக்காக மகிந்த ராஜபக்ஷவிற்கு உடனடியாக தண்டனை வழங்க வேண்டும் என மின்வலு சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

மேலும், திஸ்ஸ அத்தநாயக்க வின்போலியான கையொப்பம்கொண்ட ஒப்பந்தத்தை பிரயோகித்து தேர்தல் காலங்களில் பொய்ப் பிரசாரம் மேற்கொண்ட அரசியல்வாதிகள், பிக்குகள் அனைவரையும் உடனடியாக கைது செய்ய வேண்டும்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் வகையில் மீளவும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட கும்பலின் கை ஓங்கியுள்ளது. எனவே இந்தக் கும்பலுக்கு இடமளிக்கப் போவதில்லை. அக்கும்பலை தோல்வியடைய செய்வோம் எனவும் எச்சரித்தார்.

ஊழல் எதிர்ப்பு அமைப்பின் கருத்தரங்கு நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற போது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பெரும்பாலான மக்களின் வரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைக்கப் பெற்றது. இத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார பணிக்கு மக்களின் பணத்தை இலஞ்சமாக வழங்கினார்கள்.

57 இலட்சம் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு 250 பில்லியன் ரூபா செல விடப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷவின் பிரசார பணிகளுக்கு 90 சதவீதம் மக்களின் பணத்தையே விரயம் செய்துள்ளனர். ஏனைய 10 சதவீதம் போதைப் பொருள விநியோகித்தலில் ஈடுபடும் கொள்ளையர்களினால் கிடைக் கப்பெற்ற நிதியுதவியாகும். இவை ஒவ்வொன்றும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டதாகும்.

எவ்வாறாயினும் மகிந்த ராஜபக்ஷவின் தோல்வியை கண்டுள்ளார் எவரும் கனவிலும் நினைத்திடாத தோல்வியாகும். ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம்களினது அனைத்து கட்சிகளினதும் ஆதரவும் கிடைக்கப் பெற்றது. இவ்வேளை எவருக்கும் தனியுரிமை கோர முடியாது.

மேலும் முன்னைய அரசின் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அமைசசர்களில் பலர் கலந்து கொண்ட கும்பலில் மீளவும் பலம் பெற்றுள்ளது. தற்போது பாரிய சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க அனைத்து ஏற்படுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்திற்கு இடமளிக்கப் போவதில்லை. இதனை தோல்வியடைய செய்வோம். மகிந்தவிற்கு தண்டனை வழங்க வேண்டும். இதேவேளை, முன்னைய அரசின் ஊழல் மோசடி தொடர்பில் அனைத்து குற்றச்சாட்டுகளையும் அமெரிக்காவிற்கு தப்பிச் சென்ற முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் மீது சுமத்துகின்றனர். இதனூடாக மகிந்த ராஜபக்ஷவை நல்ல மனிதராக பார்க்கின்றனர்.

இந்நிலையில் கடன் சுமையில் இருந்து நீங்கி புதிய பொருளாதார முறைமையை நோக்கி பயணிக்க வேண்டும். அதிவேக பாதையினூடாக தொடர்பாடல் மின் விநியோகம், புகையிரத சேவை கட்டமைக்க வேண்டும். அத்தோடு ஊழல் மோசடிகளுக்கு ஜனாதிபதி ஆணைககுழு அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 2500 ரூபா உயர்வை சட்ட மூலத்தின் ஊடாக கட்டாயம் வழங்கவேண்டும்-கே.டி.லால்காந்த

(கொழும்பு)

இடைக்கால வரவு - செலவு திட்டத்தினூடாக தனியார் ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வை புதிய சட்டமூலத்தினூடாக நிறைவேற்ற கட்டாயப்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே. டி. லால்காந்த, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு அனுப்பிய மகஜரிலேயே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2006 ஆம் ஆண்டு ராஜபக்ஷ அரசினால் தனியார் ஊழியர்களுக்கு எவ்விதத்திலும் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. நாட்டில் அதிகமாக தனியார் துறை தொழிலாளர்களே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் 2005 ஆம் ஆண்டு மாத்திரம் 36 இலக்க வரவு செலவு திட்டத்தின் சலுகை பிரகாரம் தனியார் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக தனியார் ஊழியர்களின் ஊதியத்தினை கொணடே வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவு திட்டத்தினூடாக தனியார் ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 2ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதிலும் குறித்த சம்பள உயர்வினை வாழ்க்கையை கொண்டு செல்வதற்கான நிலை தனியார் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வினை சில தனியார் நிறுவனங்கள் வழங்க மறுத்துள்ளன. எனவே தனியார் ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட வேண்டும். இதன்பிரகாரம் குறித்த சட்ட மூலம் பாராளுமன்றில் நிறைவேற்ற வேண்டும் என்றும் கோரியுள்ளனர். (இ-5)

## நீலப்படையணியின் 150,000 ரீசேர்ட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான நீலப்படையணியின் ரீசேர்ட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவை சபையின் இலச்சினையுடன் நீலப் படையணியின் பெயரும் இந்த ரீசேர்ட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரீசேர்ட்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாரது படங்கள் பொறிக்கப்பட்ட இந்த ஆண்டுக்கான பெருந்தொகை நாட்காட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தலைமைக் காரியாலய களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் இந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இளைஞர் விவகார அமைச்சர் நிரோசன் பெரேரா மற்றும் இளைஞர் சேவை சபையின் தலைவர் எரந்தக வெலியங்கக உள்ளிட்ட அதிகாரிகள் களஞ்சியசாலையை சோதனையிட்டுள்ளனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### பதவி கர்வம்

ஒரே பள்ளிக்கூடத்தில் இரண்டு பேர் சேர்ந்து படித்தார்கள். அதில் ஒருவன் பின்னாளில் ஒரு பெரிய பதவிக்கு வந்து விடுகின்றான். இன்னொருவன் சாதாரண நிலைமையில் இருக்கின்றான்.

இவன் அவனைப் பார்ப்பதற்காக போகிறான். வாசலில் நிற்பவரிடம், "கூடப்படித்த சிநேகிதன் இன்னார் வந்திருக்கிறேன் என்று சொல்" என்கிறான்.

அவன் உள்ளே போய்விட்டு வந்து, "ஐயா ரொம்ப பிஸியாக இருக்கிறார்... இப்பொழுது பார்க்க முடியாதாம். இன்னொரு நாளைக்கு வரட்டாம்" என்று சொல்கிறான்.

இவன் பேசாமல் திரும்பிப்போய் விடுகிறான். இது சாதாரணமாக நடக்கக் கூடிய நிகழ்ச்சி. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பதவிக் கர்வம்தான் காரணம்.

"பெருக்கத்து வேண்டும் பணிவு" என்றார் திருவள்ளுவர். பதவி அதிகமாக-பணிவு அதிகமாக வேண்டும். அதுதான் பெருமை.

பதவிக் கர்வம் அந்த நிமிடத்தில் வேண்டுமானால் ஒரு சுகத்தைக் கொடுக்கலாம். பின்னர் அது ஒரு கட்டத்தில் அவமானத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்.

மகாபாரதத்தில் வரும் துருபதனே இதற்கு ஒரு நல்ல உதாரணம்! துருபதன்-பாஞ்சால தேசத்து அரசன்! துரோணர் ஏழை. பரத்வாஜ ஆச்சிரமத்தில்தான் இருவரும் சேர்ந்து படித்தார்கள். நல்ல நண்பர்களாக இருந்தனர்.

குருகுலவாசம் முடிந்தது! துருபதன் பாஞ்சால தேசத்தின் ராஜாவாகி விட்டார். ஆனால் துரோணரோ வறுமையால் மிகவும் கஷ்டப்பட்டார். தங்கள் குழந்தைக்கு பால் கொடுப்பதற்கு ஒரு பசு கூட இல்லாத நிலையில் தவித்தார்.

அவரின் மனைவி "ஏன் இப்படிக் கவலைப்படுகிறீர்கள்? துருபத ராஜா தான் உங்கள் சிநேகிதர் என்று சொல்கிறீர்களே! அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்!" என்று அனுப்பி வைத்தார்.

துரோணரும் சரியென்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போனார். துருபதனைப் பார்த்தார். "நண்பா என்னை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றார். அப்பொழுது பதவிக்கர்வம் துருபதனின் கண்ணை மறைத்துவிட்டது!

"மூடரே! ஏழை-பணக்காரரோடும், மூடன்- அறிவாளியோடும், பயந்தாங்கொள்ளி-சூத்த வீரனோடும் நட்பாக இருக்கு முடியுமா?" என்று சொல்லி அவரை அவமானப்படுத்தி விட்டார்.

அதன் விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? காலம் மாறி விட்டது. துரோணர் அஸ்தினாபுரம் அரச குமாரர்களுக்கு ஆசிரியரானார்! அர்ச்சுனன் அவருடைய சிறந்த மாணவன் ஆனான். அவன் துருபதனை ஜெயித்து, அவனைத் தேர்க் காலில் கட்டி, துரோணரிடம் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறான்.

அர்ச்சுனன் துரோணருக்குக் கொடுத்த குருதட்சனை இது! இவர் கேட்டதும் இதைத்தான். பழைய நட்பை மறந்து துருபதன் இப்பொழுது தனது இராஜ்ஜியத்தை இழந்து அவமானத்தால் தலைகுனிந்து நிற்கிறான். அப்பொழுது துரோணர் சொல்கிறார்.

"உனது இராஜ்ஜியத்தில் அரைவாசியை நான் எடுத்துக் கொண்டேன். இதனால் இப்பொழுது நாம் இருவரும் சமம் ஆகிவிட்டோம்! இனிமேல் நாம் நண்பர்களாக இருக்கலாம்!" என்கிறார்.

இந்தப் புராணக்கதை வெறுமனே படிப்பதற்கோ-கேட்பதற்கோ மட்டுமல்ல! நம்மை பக்குவப்படுத்திக் கொள்வதற்கே ஆகும். பஜ கோவிந்தத்தில் ஆதிசங்கர் "மா குரு தன ஜன யௌவன கர்வம்" என்கிறார்.

அதாவது உன்னுடைய பணத்தைப் பற்றியோ, ஜன ஆதரவை பற்றியோ, உன் இளமைப் பருவத்தைப் பற்றியோ கவலைப் படாதே. ஏனெனில் "காலம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழித்து விடும்!" என்கிறார்.

இது புரியாமல் நடப்பதால்தான் பல சந்தர்ப்பங்களில் நாம் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் இருந்தார். தற்காலிகமாக அவருக்கு "தலைவர்" பதவி கிடைத்து விட்டது. வேறு ஒன்றுமில்லை. ஒரு கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பதவி!

அதற்கே அவர் தன்னைப் பற்றி ரொம்பப் பெரிதாக நினைக்க ஆரம்பித்தார்.

ஒரு பேச்சாளர் எழுந்து வந்து "பெரியோர்களே! தாய்மார்களே!" என்றார். உடனே தலைவருக்கு கோபம் வந்து விட்டது! "முதலில் தலைவர் அவர்களே என்று சொல்லுங்க!" என்றார். உடனே பேச்சாளர்... "மன்னிக்க வேண்டும்! தவறுதலாக நான் தலைவரையும் பெரியோர்கள் லிஸ்டில் சேர்த்து விட்டேன்!" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவிலிருந்து இஸ்ரேல் வந்த "யூதர்"களின் கதை?



சோவியத் ஒன்றியத்திலிருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட யூதர்கள், இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்ததன் 25 ஆவது ஆண்டு இது. இஸ்ரேலிய சமூகத்தில் இது குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது என்றே சொல்லலாம்.

சோவியத் ஒன்றியத்தின் இரும்புத் திரை விலகிய பின்னர், இஸ்ரேலை நோக்கி யூதர்கள் திரண்டு வரத் தொடங்கினர். இஸ்ரேலில் இன்று இருக்கும் யூதர்களில் 5 இல் ஒருவர், சோவியத் ஒன்றியத்திலிருந்து வந்தவர் தான்.

ரஷ்யாவிலிருந்து குடிபுகுந்த அலியாக்களின் (வெவ்வேறு நாடுகளிலிருந்து இஸ்ரேலுக்குள் குடிபுகுந்த யூதர்களைக் குறிக்கும் சொல்) வாழ்க்கைச் சரித்திரம், வெற்றிக் கதைகளுக்கு உதாரணம்.

"ஒருசில ஆண்டுகளிலேயே இஸ்ரேலின் மக்கள்தொகையில் 20% அதிகரித்துவிட்டது" என்று நினைவு கூர்கிறார் சோவியத் ஒன்றியத்தை எதிர்த்துப் போராடிய யூதர்களில் ஒருவரான நடான் ஷாரன்ஸ்கி. மனித உரிமைப் போராளியான இவர், சோவியத் ஒன்றியத்திலிருந்து யூதர்களை இஸ்ரேலுக்குக் கொண்டுவருவதற்காகக் கடுமையாகப் போராடியவர். "இதுபோன்ற வெற்றிகரமான ஒற்றுமையை உலகில் வேறெங்கும் பார்த்திருக்க முடியாது" என்கிறார் ஷாரன்ஸ்கி.

ஆனால், "ஒற்றுமை என்பது தவறான வார்த்தை" என்கிறார் இஸ்ரேலிய பத்திரிகையாளரும் யூதர்களின் குடிபெயர்வைக் குறித்துப் பேசும் 'தி மில்லியன் தட் சேஞ்ச்டு தி மிடில் ஈஸ்ட்' எனும் புத்தகத்தின் இணை ஆசிரியருமான லிலி காலிலி.

"ஒற்றுமை என்பதைக் குறித்து அவர்கள் பெரிதாகப் பேசவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, தலைமை தான் குறி. அது அவர்களின இயல்பு. அவர்களது மரபணுவிலேயே இருப்பது. அவர்கள் வெளிப்படையாகவே சொன்னார்கள், 'நாங்கள் இங்கிருப்பது ஒருங்கிணைப்பதற்காக மட்டுமல்ல, தேவையில்லாமல் உங்கள் நாட்டையோ, கலாச்சாரத்தையோ நாங்கள் புகழ மாட்டோம். ஆனால் அதை எப்படி மேம்படுத்துவது என்பது எங்களுக்குத் தெரியும்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்" என்கிறார் லிலி காலிலி.

1990 களில் வளைகுடாப் போர் நடந்துகொண்டிருந்த சமயத்தில், இஸ்ரேல் விமான நிலையத்தில் மூட்டை முடிச்சுடன் வந்திறங்கிய சோவியத் ஒன்றிய யூதர்கள், உள்ளூர வசிப்பிடங்களையும் பணியிடங்களையும கற்பனை செய்ய முடியாத அளவுக்கு விரிவாக்கத் தொடங்கினார்கள்.

தினமும் வந்து குவிந்துகொண்டிருந்த சோவியத் ஒன்றிய யூதர்களுக்காக, ஏராளமான தற்காலிகக் குடியிருப்புகளை இஸ்ரேல் அரசு உருவாக்கித் தந்தது. வந்து சேர்ந்தவர்களுக்குத் தங்கள் தகுதிக்கேற்ற வேலை கிடைத்துவிடவில்லை. சோவியத் ஒன்றியத்தில் மருத்துவரகளாக, விஞ்ஞானிகளாக, இசைக் கலைஞர்களாக வேலை பார்த்தவர்கள், இஸ்ரேலில் சாலையைப் பெருக்குவது முதல் காவலாளி வேலை வரை, கிடைத்த பணிகளைச் செய்ய நேர்ந்தது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு எல்லாமே மாறியது. ரஷ்ய மொழி பேசும் யூதர்கள் அரசியல் தலைவர்களாகவும் மருத்துவர்களாகவும் உயர் தொழில்நுட்பப் பொறியாளர்களாகவும், மென்பொருள் வல்லுநர்களாகவும் வளர்ந்திருக்கிறார்கள். இஸ்ரேலின் வெளியுறத் துறை அமைச்சர் அவிக்டார் லியபெர்மான், ரஷ்ய மொழி பேசும் யூதர் தான். இஸ்ரேல் நாடாளுமன்ற சபாநாயகர் யூலி எடெல்ஸ்டேனும் சோவியத் ஒன்றியத்திலிருந்து வந்த யூதர்தான். இஸ்ரேல் பள்ளிகளில், ஜிம்னாஸ்டிக், நடனம், இசை என்று பல்வேறு விடயங்களைக் கற்றுத்தரும் ஆசிரியர்களில் பலர் ரஷ்ய மொழி பேசும் யூதர்களே!

அதேசமயம், 1990 இலிருந்து சோவியத் ஒன்றியத்திலிருந்து இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்துவந்தவர்கள், மதக் கோட்பாடுகளின்படி யூதர்கள் என்றே கருதப்படுவதில்லை என்பது இன்னொரு விடயம். அவர்கள், நாடு திரும்புதல் சட்டத்தின் கீழ், இஸ்ரேலுக்குத் திரும்பி வருவதற்கான அனுமதி பெற்றவர்கள்தானே தவிர முழுமையான யூதர்களாகக் கருதப்படவில்லை.

இவர்கள், இஸ்ரேலில் உள்ள யூதர்களுடன் திருமண உறவு வைத்துக்கொள்ள அனுமதி இல்லை. யூதர்களின் கல்லறையில் இவர்களது உடல் புதைக்கப்படவும் அனுமதி இல்லை. இதனால், புதிய புகலிடத்தில் அந்நியர்களாகவே வாழ்கிறார்கள் ரஷ்ய மொழி பேசும் யூதர்கள். இதனால், கடந்த சில ஆண்டுகளில் இஸ்ரேலிலிருந்து வெளிநாடுகளுக்குக் குடிபெயர்பவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில், ரஷ்ய மொழி பேசும் யூதர்கள் இருப்பதில் ஆச்சரியமில்லை!

**-"ஹாரெட்ஸ்" இஸ்ரேல் நாளிதழ் தலையங்கம்-**

# பயங்கரவாதத்தின் கரங்கள் நீள்கின்றன!



பயங்கரவாதத்துக்கென்று எந்த மதமும் இல்லை என்பது போல் எந்த எல்லையும் இல்லை என்பதும் உண்மையே. ஈராக், சிரியா என்ற அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, ஜப்பானை இப்போது அச்சுறுத்தத் தொடங்கியிருக்கிறது. ஜப்பானைச் சேர்ந்த கென்ஜி கோட்டோ, ஹருணா யுகாவா என்ற இரண்டு பத்திரி கையாளர்களைச் சமீபத்தில் படுகொலை செய்ததோடல்லாமல், எதிர்காலத்தில் ஜப்பான் இராணுவத்தைக் குறிவைத்துத் தாக்குவோம் என்று அந்த அமைப்பு எச்சரித்திருக்கிறது.

பிரதமர் ஷின்சோ அபே தலைமையிலான ஜப்பானிய அரசுக்கு இது புதிய சவால். இந்தப்படுகொலைச சம்பவங்களால் ஒட்டுமொத்த ஜப்பானியர்களின் எண்ணமும் அந்நாட்டு அரசின் வெளியுறவுக் கொள்கையும் புதிய திசையில் திரும்பும் நிலையில் இருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, ஜப்பான் அடங்கிவிட்டது. 1946 இல் இதற்காக அந்நாட்டு அரசியல் சட்டத்தில் முக்கியத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இனி, போர் செய்வதில்லை என்று தீர்மானித்துக்கொண்ட ஜப்பான், பிற நாடுகளின் மீது படையெடுத்துப் போரிடும் அளவுக்குத் தன் இராணுவத்தை வலிமை கொண்டதாக ஆக்கவில்லை.

சர்வதேச அளவில் மோதல்கள் நடந்தாலும், எந்த ஒரு நாடாவது முரட்டுத்தனமாக நடந்துகொண்டாலும் தான் உண்டு தன் வேலை உண்டு என்று ஒதுங்குவதே ஜப்பானின் இயல்பு.

வல்லரசுக் கனவுகளில் பல நாடுகள் இருக்கும்போது, இராணுவ ரீதியாக வல்லரசுகளில் ஒன்றாக ஆகும் வாய்ப்பு இருந்தும் கூட, அதை ஜப்பான் தவிர்த்து வந்தது புவியரசியல் களத்தில் வியப்பளிக்கும் விடயம். அதனுடைய இராணுவ பலமும் சட்டம்- ஒழுங்கை அமல்படுத்துவதற்காகவும், அமைதியை நிலைநாட்டவும, தற்காப்புக்காகவும் மட்டுமே திருத்தியமைக்கப்பட்டது.

எந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலில் ஜப்பான் தலையிடுவதே இல்லை. அப்படியிருக்க, ஜப்பானை ஏன் ஐ.எஸ். இலக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே ஜப்பானின் வெளியுறவுக் கொள்கையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தேசியவாதியும் பழமைவாதத்தை ஆதரிப்பவருமான ஷின்சோ அபே 2012 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது முதலே ஜப்பானின் அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சித்து வருகிறார். இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்திருக்கிறார். ஆயுத ஏற்றுமதி மீதான தடையை நீக்கியிருக்கிறார். ஜப்பான் இராணுவத்தின் திறனைக் கூட்டி வருகிறார்.

இயற்கை வளங்கள் குறைவாக இருப்பதால், தனக்குத் தேவைப்படும் கச்சா பெட்ரோலிய எண்ணெயை மத்தியக் கிழக்கு நாடுகளிடம் இருந்துதான் ஜப்பான் இறக்குமதி செய்துகொள்கிறது. மத்தியக் கிழக்கில் அமைதி ஏற்பட்டால்தான் ஜப்பானுக்கும் பொருளாதார ரீதியாக நல்லது. ஐ.எஸ். அமைப்பை எதிர்த்துப் போரிடும் நாடுகளுக்கு இராணுவமல்லாத தேவைகளுக்காகச் சுமார் 1,200 கோடி ரூபாய் உதவியை ஷிபே அறிவித்தார். ஐ.எஸ். நடவடிக்கையால் ஈராக், சிரியா நாடுகளிலிருந்து உயிருக்கு அஞ்சி வெளியேறும் அகதிகளுக்கு உதவிகள் அளிக்கவும் தயார் என்றார். அங்கே தொடங்கியது வினை!

ஜப்பானைக் குறி வைத்ததாகக் கருதி, அந்நாட்டின் இரு பத்திரிகையாளர்களை ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொன்றிருப்பது ஜப்பானியர்களிடையே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிறது. ஜபபானை மீண்டும் அதன் பழைய போர் நாட்களை நோக்கி நகர்த்து கிறார்கள் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள் பலரும். ஜப்பான் நிதானமாகக் கடக்க வேண்டிய காலம் இது. ஒரு அரசின் செயற்பாடுகள் ஒருபோதும் ஒரு பயங்கரவாத அமைப்பின் செயற்பாடுகளால் உந்தப்படக் கூடாது.

**-தி. இந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுத்தாக்குதல் 30பேர் உயிரிழப்பு

**(பக்தாத்)**

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல்களினால் அதிர்ந்து போயுள்ள ஈராக்கில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அமுலில் இருந்து வந்த ஊரடங்கு உத்தரவு தளர்த் தப்பட் டதையடுத்து நேற்றுக் காலை இடம் பெற்ற பாரிய தற் கொலைப் படைத் தாக் குதலில் சிக்கி சுமார் 30 பேர் உடல் சிதறி சம்பவ இடத்தில் பலியான அதேவேளை 40 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**



இந்தக்கொடூர சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

ஈராக் த்லைநகர் பக்தாத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாக அமுலில் இருந்த இரவு நேர ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்து அங்கு தாக்குதல் அதிகரித்து வருகிறது.

அந்த வகையில், நேற்று நடைபெற்ற மனித வெடிகுண்டு மற்றும் குண்டு வீச்சு தாக்குதலில் 30 பேர் பரிதாபமாக பலியாகினர்.

பக்தாத்தின் அடன் சதுக்கம் பகுதியில் நேற்றுக்காலை நுழைந்த தீவிரவாதி ஒருவன், தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்த தாக்குதலில் 24 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற சில மணி நேரங்களில் பக்தாத்தின் வடகிழக்குப் புறநகர் பகுதியான ஹுசைனியாவில் நிகழ்ந்த மேலும் ஒரு வெடிகுண்டுத் தாக்குதலில் ஆறு பேர் பலியாகினர்.

இவ்விரு தாக்குதல்களிலும் 40இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது (இ-5)




## நம்பிக்கை வாக்கெடுப்பில் அவுஸ்திரேலிய பிரதமர் வெற்றி



அவுஸ்திரேலியாவில் ஆளும் லிபரல் கட்சி சார்பில் பிரதமராக பதவி வகித்து வருபவர் டோனி அப்போட். இவருக்கு எதிராக கடந்த சில நாட்களுக்கு முன்னர் கட்சியில் பூசல் கிளம்பியது. இதனால் அவருக்கு எதிராக மேற்கு அவுஸ்திரேலிய எம்.பி. லூக் சிம்கின்ஸ் கடந்த வாரம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த தீர்மானத்தின் மீது நேற்று முன்தினம் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. கான்பெராவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடந்த இந்த வாக்கெடுப்பில் 61 வாக்குகள் பெற்று டோனி அப்போட் வெற்றி பெற்றார். அவருக்கு எதிராக 39 வாக்குகள் பதிவாகின. இந்த தகவலை கட்சித் தலைவர் பிலிப் ரட்டோக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக நம்பிக்கை வாக்கெடுப் பில் டோனி அப்போட் தோல்வியுற்றால், அவரது இடத்துக்கு தகவல் தொடர்பு அமைச்சர் டர்ன்புல் வரக்கூடும் என கருத்துக் கணிப்புகள் தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு நாம் நிதியுதவி அளிப்பதில்லை

### சவுதி அரேபியா அறிவிப்பு

பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எண்ணெய் வள நாடுகள் நிதி உதவி அளிப்பதாக பாகிஸ்தான் அமைச்சர் கூறிய கருத்தை சவுதி அரேபியா நிராகரித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு சவுதிஅரேபியா சட்டவிரோதமாக நிதியுதவி அளித்து வருவதாக பாகிஸ்தானின் உள்துறை மாகாண ஒருங்கிணைப்பு அமைச்சர் ரியாஸ் ஹுசைன் பிர்சதா கடந்த மாதம் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், மேற்கண்ட குற்றச்சாட்டிற்கு விளக்கம் அளிக்கும் வகையில் பாகிஸ்தானில் உள்ள சவுதி அரேபிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானில் தீவிரவாத எண்ணத்தோடு இருப்பவர்களை மேலும் தூண்டிவிடும் நோக்கத்தோடு சவுதி அரேபிய அரசு நிதியுதவி அளிப்பதாக சில பத்திரிகைகள் சமீப காலமாக தவறான செய்திகளை பரப்பி வருகின்றன. நிதியுதவி கேட்டு வரும் விண்ணப்பங்கள் குறித்து உண்மைத் தன்மை உறுதி செய்த பின்னரே மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் நிதியுதவி அளிக்கிறோம். நிதியுதவி மக்கள் நலத்திட்டங்களுக்கு தான் அளிக்கப்படுகிறது.

இந்த உதவி ஒருபோதும் பிரிவினைவாத குழுக்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்துள்ளது. (இ-5)

## கூட்டுப்படைகள் தோற்கடிக்கப்படும்




நைஜீரியத் தீவிரவாதக் குழுவான போகோஹறாம், தங்களை எதிர்த்துப் போராடவுள்ள புதிய பிராந்தியப் படையை தோல்வியுறச் செய்வதற்கு உறுதிபூண்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

காணொலி மூலம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், தங்களை வெற்றிகொள்ளும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள பிராந்தியப் படையால் ஒன்றும் சாதிக்க முடி யாது என போகோஹறாமின் தலை வர் அபுபக்கர் ஷெகாவ் கூறியுள் ளார்.

அந்தத் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராட, சுமார் 9 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட பிராந்தியப் படை ஒன்றை அமைக்க நைஜீரியா, கமரூன், சாட், நிஜேர் மற்றும் பெனின் ஆகிய நாடுகள் உடன்பட்டிருந்தன.

தமது தரப்பில் இந்தப் படைக்கு 700 வீரர்களை அனுப்பவுள்ளது குறித்து நிஜேர் நாட்டின் நாடாளுமன்றம் விவாதித்து வாக்களிக்கவுள்ளது.

இதேவேளை நிஜேர் நாட்டிலுள்ள டீஃபா நகரிலுள்ள ஒரு சிறைச்சாலை மீது அந்தத் தீவிரவாதிகள நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த நான்கு நாட்களில் நடைபெறும் மூன்றாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாடசாலைகள் மீதான தாக்குதல் அதிகரிப்பு!

### ஐ.நா.தகவல்

உலகெங்கும் பெண்களுக்கான பாடசாலைகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்கும் 2014 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், எழுபது நாடுகளில் நடைபெற்ற தாக்குதல்களை ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான அலுவலகம் பட்டியலிட்டுள்ளது.

பாலியல் சமத்துவத்துக்காக பாடுபடும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் இலக்குவைத்து தாக்[illegible]டுள்ளனர்.

இத்தாக்குதல்களில் பெரும்பான்மையானவை ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சோமாலியா போன்ற நாடுகளில் நடைபெற்றுள்ளன.

அங்குள்ள இஸ்லாமிய கடும்போக்காளர்கள் பெண்கள் கல்வி பயில்வதை எதிர்க்கின்றனர்.

பெண்களுக்கு கல்வி மறுக்கப்படுவதால் சமூகத்தில் கடுமையான விளைவுகள் ஏற்படுவதாக இந்த அறிக்கை எச்சரித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் முதுகில் குத்தியுள்ளது

## உலமா கட்சித் தலைவர் ஆதங்கம்

(கொழும்பு)

**கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சர் பதவியை பெற்றதன்மூலம் மகிந்தவை அரசியலில் இருந்து விரட்ட வேண்டும் என நினைத்த முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களின் முதுகில்அக்கட்சி குத்தியுள்ளது என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு ஆதரவளித்த முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்யாமல் ஆட்சியை அப்படியே விட்டு வைத்திருப்பதன் காரணம் ஒருவேளை மகிந்த வென்றால் கிழக்கு சபையை காட்டி மீண்டும் மகிந்தவுடன் இணைவதற்காகவே என நாம் அன்று கூறியது இன்று நிஜமாகியுள்ளது. மகிந்த தோற்ற நிலையில் அவரின் கட்சிக்காரர்களுடன் இணைந்து கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் தொடர்கிறது.

இதனால் முஸ்லிம் காங்கிரஸ் தமக்கு உதவும் என மலைபோல் நம்பியிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இன்று நடுத்தெருவில் நிற்பதற்கு காரணம் அக்கட்சியினரால் இன்னமும் மு.கா பற்றியும் அதன் பதவி வெறி பற்றியும் புரிந்து கொள்ளாமையுமேயாகும்.

கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல தமிழ்க்கூட்டமைப்புக்கும் பல துரோகங்களை செய்து வந்துள்ளது.

ஆனாலும் முஸ்லிம்கள் சம்பந்தமான விடயங்களில் தமிழ் கூட்டமைப்பினர் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதையம் அக்கட்சியை தூக்கிப்பிடிப்பதையுமே கண்டு வந்துள்ளோம்.

இது பற்றி நாம் பல தடவை தமிழ் கூட்டமைப்பை எச்சரித்துள்ளோம். ஒரு ஏமாற்றுக் கட்சிக்கு வாக்கு வங்கி இருப்பதற்காக மட்டும் அக்கட்சி சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்பதையும் முஸ்லிம் சமூகத்தில் பலமாக அரசியல் செய்து வளர்ந்து கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளுடன் பேசி தமிழ், முஸ்லிம் நல்லுறவை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும் என நாம் பல தடவை தமிழ் கூட்டமைப்புக்கு அறைகூவல் விடுத்துள்ளோம். ஆனால் அவர்கள் மு. காவை நம்புவதும் பின்னர் ஏமாறுவதும். ஏமாற்றிவிட்டார்களே என முஸ்லிம்களை போன்று ஒப்பாரி வைப்பதையுமே கண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இலங்கையர்கள் சுவிஸ் வங்கியில் பதுக்கிய பணம் குறித்த அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து வங்கிகளில் இலங்கையைச் சேர்ந்தவர்களால் 58.3 மில்லியன் டொலர் பணம் இரகசியமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிஸ் லீக்ஸ் வெளியிட்டுள்ள தகவலின்படி, இலங்கையைச் சேர்ந்த 92 வாடிக்கையாளர்களால் சுவிஸ் வங்கிகளில் 129 கணக்குகள் பேணப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

அதிகபட்சமாக இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரால், 10.7 மில்லியன் டொலர் வைப்பில் இடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சுவிஸ் வங்கிகளில் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 112ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, உலகின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான எச்.எஸ்.பி.சி. வங்கி அதனது வாடிகையாளர்களுக்கு வரி ஏய்ப்பு செய்ய உதவியதாக பி.பி.சி.க்கும் ஏனைய சில ஊடகங்களுக்கும் கசிந்த ஆவணங்கள் காண்பிக்கின்றன.

எச்.எஸ்.பி.சி.க்காக ஜெனீவாவில் வேலைபார்த்த கணனி நிபுணர் ஒருவர் 2007இல் கசியவிட்ட தரவுகளில் இருந்து கிடைக்கப்பெறுகின்ற தகவல்களே தற்போது வெளியாகியுள்ளன.

2006-2007 காலகட்டத்தில் இந்த வங்கியில் கணக்கு வைத்திருந்த மொத்தம் 203 நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து ஆறாயிரம் பேரின் கணக்கு விபரங்களை பிபிசியின் பனோரமா நிகழ்ச்சி ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு சர்வதேச ஊடக நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் ஆராய்ந்துள்ளனர்.

பிரஞ்சு பத்திரிகையான **லமோந்**த்துக்கு இந்த தரவுகள் முதலில் கொடுக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் புலனாய்வு பத்திரிகையாளர்கள் சர்வதேச கூட்டமைப்பு என்ற அமைப்பினாலும் பிபிசி உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்களாலும் இந்த தரவுகள் ஆராயப்பட்டிருந்தன.

தனிநபர்கள் இரகசியக் கணக்குகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கும் எச்.எஸ்.பி.சி.யின் சுவிஸ் கிளை நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு அந்த வங்கி, அரசாங்க வரித்துறைக்கு தெரியாமல் பணத்தை கொண்டு வந்து சேர்க்கும் வழிகள் பற்றி இந்த வங்கி ஆலோசனை வழங்கியதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

வெளியில் தெரியாமல் பணம் வைக்கக்கூடிய வசதி தரக்கூடிய கணக்குகளை பயன்படுத்திக் கொண்டு, சிலர் வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பதை எச்.எஸ்.பி.சி. ஒப்புக்கொண்டுள்ளது.

ஆனால் அவ்வகையான வங்கிக் கணக்குகளுக்குரிய விதிமுறைகளை தாம் முற்றாக மாற்றிவிட்டதாகவும், அவற்றின் வழியாக யாரும் வரி ஏய்ப்பு செய்ய இனி வாய்ப்பு இல்லை என்றும் எச்.எஸ்.பி.சி. கூறுகிறது.

வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைப்பது என்பதே சட்டவிரோதம் என்றில்லை. ஆனால் வரித்துறை அதிகாரிகளிடம் இருந்து பணத்தை பதுக்குவதற்காக இவ்வகை கணக்குகளை பலர் பயன்படுத்தும் நிலை காணப்படுகிறது.


வரி விதிக்கப்படாத வகையில் நிதியை நிர்வகிப்பது சட்டப்படி அனுமதிக்கப்பட்ட செயல்தான். ஆனால் வரி ஏய்ப்பிற்காக பணத்தை பதுக்குவது சட்டவிரோதமானது.

அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம் ஆர்ஜெண்டினா போன்ற நாடுகளில் எச்.எஸ்.பி.சிக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஆனால் இந்த வங்கியின் தலைமையகமான பிரிட்டனில் கிரிமினல் விசாரணைகள் எதனையும் அது எதிர்கொள்ளவில்லை. விசாரிக்கும் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வருவதாக எச்.எஸ்.பி.சி. மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கறுப்புப் பண விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில் இலங்கையிலும் தற்போது கறுப்புப்பண விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**கதிரவேலு குணரத்தினம் (டிங்கர்குணம்)**


பழையவீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குணரத்தினம் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.



**திருமதி யே.யக்கோவா (கிளி)**

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பி மாகவும் கொண்ட யக்கோவா யேக்கப் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இளவாலை புனித யூதாததேயு ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**சிவஸ்ரீ கந்தையாகுருக்கள் கணபதிப்பிள்ளை குருக்கள்**

சரசாலையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி மற்றும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ கந்தையா குருக்கள் கணபதிப்பிள்ளை குருக்கள் (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை சிவ ஐக்கியமானார். அன்னாரின் சமாதிக்கிரியைகள் இன்று 11.02.2015 புதின்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் சமாதி வைக்கப்படும்.



**அசோக் சந்திரலிங்கம்**

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zug, St.Gallen ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அசோக் சந்திரசேகரலிங்கம் அவர்கள் கடந்த சனிக்கிழமை அன்று காலமானார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## பல இலட்சம் வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இலங்கையர் ஒருவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)


வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றத்தாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை கைது செய்துள்ளதாக சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்ட 10 கட்டுக்களை பையொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பாரம்பரிய வாத்தியங்கள் பொது நிகழ்வுகளில் பயன்படுத்த வேண்டும்

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(குருமன்காடு)

மேலைத்தேய மோகத்தில் இருந்து விடுபட்டு தமிழரின் பாரம்பரிய வாத்திய ங்களால் பொது நிகழ்வுகளை சிறப்பிக்க வேண்டும் என வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள் ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு பாரம் பரிய இசைக்கருவி உபகரணங்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்து நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இன்று நம்மில் பலர் எமது பாரம்பரிய கலையை மறந்து ஆங்கிலேய கலாசாரத்தில் மோகம் கொண்டுள்ளோம். இதனால் தான் பாண்ட் வாத்தியங்களில் கவனத்தை செலு த்தியுள்ளோம்.

எமது மொழி, கலாசாரம் மிகத்தொன்மை வாய்ந்தது. இனிவரும் காலங்களில் இவ்வா றான இன்னிய வாத்தியங்களை இசைத்து பொது நிகழ்வுகளை நடத்த வேண்டும். இதன் மூலம் எமது கலைகள் மறையாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும் என தெரி வித்தார்.

இதனால்தான தமிழரின்பாரம்பரியகலையை பிரதிபலிக்கும் உடுக்கை, தவில், நாதஸ்வரம், பறை, புல்லாங்குழல், கொம்பு போன்ற உபகரணங்கள் அமைச்சரினால் பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டது என் றார். (2-250)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுகின்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்

(மல்லாவி)

தேசிய மோட்டார் போக்குவரத்து திணைக்க ளத்தின் முல்லைத்தீவு மாவட்டப் பிரிவினர் புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்பவர்கள் கடைப்பி டிக்க வேண்டிய அறி வுறுத்தல்கள் தொடர்பில் செய்திக் குறிப்பொ ன்றை வெளியிட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் புதிய சாரதி அனுமதிப் பத் திரம் பெறுவதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு வருகை தருபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பிற ப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய ஆள் அடை யாள அட்டை மற்றும் அதன் பிரதி, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் மருத் துவ சான்றிதழ், கறுப்பு, வெள்ளை புகைப் படங்கள் நான்கு, பணம் செலுத்திய பற்றுச் சீட்டு என்பனவற்றை தம்முடன்எடுத்து வரவேண்டும்.

இதேவேளை பணம் செலுத்தப்பட்ட திகதியி லிருந்து 18 மாதங்கள் வரை விண்ணப்பங் கள் செல்லுபடியாகும். அக்காலப்பகுதிக்குள் சாரதிப் அனுமதிப் பத்திரம் தொடர்பான அனை த்து பரீட்சைகளிலும் விண்ணப்பதாரி சித்தி யெய்திருக்க வேண்டும். 17 வயது பூர்த்தி அடைந்ததன் பின்னர் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றமுடியும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த 3 மாதங்களின் பின்னர் சாரதி பரீட்சைக்கு சமு கமளிக்கவேண்டும். ஆயினும் 18 வயது பூர்த்தி அடைந்த பின் சாரதி பரீட்சைக்கு தோற்ற முடியும் என சாரதி அனுமதிப் பத்திரம் புதிதாக பெறுவது தொடர்பான அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (2-15)




# நண்பர்கள் நற்பணி மன்றத்தின் நிர்வாக ஒன்றுகூடலும் கள ஆய்வும்

(கிளிநொச்சி)

நண்பர்கள் நற்பணி மன்றத்தின் இவ்வா ண்டிற்கான நிர்வாக ஒன்றுகூடலும் கிளி நொச்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி தொடர் பான கள ஆய்வும் அண்மையில் நடை பெற்றது.

கிளிநொச்சி மாயவனூர் பிரதேசத்தில் நடை பெற்ற குறித்த நிர்வாக ஒன்றுகூடலில் வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அத்துடன் விவசாய நடவடிக்கைகளை மேம் படுத்தும் வகையில் நல்லின பழமரக்கன் றுகள், தென்னை, கமுகு போன்றவையும் வழங்கப்படுவதற்கான முதற்கட்ட நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


இதேவேளை பாடசாலைகளில் இருந்து இடைவிலகி கல்வியைத் தொடராத மாண வர்களை மீளவும் கல்விச் செயற்பாட்டிற்கு இணைத்தல், கற்றல் உபகரணங்கள் வழங்கு தல் ஆகிய விடயங்கள் மன்றத்தின் செயற்கு ழுவினால் பரிந்துரைக்கப்பட்டது என இம் மன்றத்தின் அமைப்பாளரும் ஆலோசகருமான சி.கௌதமன் தெரிவித்துள்ளார். (2-272)



கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் அ.ஸ்ரீபங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற போது....

(படங்கள்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 220 மில்லியன் ரூபாய் செலவில் அமைக் கப்பட்ட புதிய கட்டடத்தொகுதி உள்நாட்டு அலு வல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவால் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட கட்டடப் பணிகள் கடந்த 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவடைந்தன. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நாக லிங்கம் வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோனோதராதலிங்கம், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூப வதி கேதீஸ்வரன், மாவட் டச் செயலக உத்தியோ கத்தர்கள் ஆகியோர் கல ந்துகொண்டனர்.

2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர், முல்லைத்தீவு நகரை அபிவிருத்தி செய்யும் வகையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கட்டடப் பணிகள் 220 மில்லியன் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முடிக்கப்பட்டுள் ளன.

மேலும் 250 மில்லியன் ரூபாய் செலவில் மாவட்ட செயலக மிகுதி வேலைகள் இடம் பெறவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டார். (2-280)

# வீதியை விட்டு விலகிய லொறி விபத்திற்குள்ளானது

**4 பேர் பலி, 14 பேர் காயம்**




(குருமன்காடு)

லொறியொன்றுவீதியை விட்டு விலகி விபத் துக்குள்ளானதில் அதில்பயணம்செய்த 4 பேர் உயிரிழந்த னர். 13 பேர் காய மடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு வவு னியா மதவாச்சி வீதி யில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா மதவாச்சி பிரதான வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி தண்டவாளங்களை ஏற்றி பயணித்த லொறி திருப்பம் ஒன்றில் திரும்ப முற்பட்டவேளை இவ்விபத்து நேர்ந் துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மதவாச்சி, அநுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின் றார்கள்.

மேற்படி விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மேற்படி வாகனத்தில் பயணித்தவர்களே மரணம் அடைந்தும் காயமடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் ஓர் பார்வையில்...



2007 ஆம் ஆண்டு பல்வேறு சொதப்பல்களுக்கு பிறகு இலங்கையை வீழ்த்தி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது அவுஸ்திரேலியா.

9 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி



2007 ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி முதல் ஏப்ரல் 28ஆம் திகதி வரை மேற்கிந்திய தீவுகளில் முதல் முறையாக நடைபெற்றது.

ஒவ்வொரு அணிகளும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெறும்.

லீக் முடிவில் எதிர்பாராத விதமாக முன்னாள் சம்பியன்கள் இந்தியா, பாகிஸ்தான் வெளியேற, அவுஸ்திரேலியா. தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து. இலங்கை, மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகளுடன் அனுபவம் இல்லாத வங்கதேசம் மற்றும் அயர்லாந்து அணிகள் சுப்பர்-8 சுற்றுக்குள் நுழைந்தன.

இந்த சுற்றிலும் ஒரு சில திருப்பங்கள் இருந்தன. வங்கதேசம் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்காவை தோற்கடித்தது. இருப்பினும் இதனால் தென் ஆபிரிக்காவுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

சுப்பர்-8 சுற்றில் அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிகளை அள்ளிய அவுஸ்திரேலியா (14 புள்ளி), இலங்கை (10 புள்ளி), நியூசிலாந்து (10 புள்ளி), தென் ஆபிரிக்கா (8 புள்ளி) ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

அரையிறுதி ஆட்டங்களில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்காவையும், இலங்கை அணி 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தையும் வீழ்த்தின.

பிரிட்ஜ்டவுனில் அவுஸ்திரேலியா- இலங்கை இடையிலான இறுதி ஆட்டம் நடந்தது. மழையால் 38 ஓவர்களாக குறைக்கப்பட்ட இந்த மோதலில் முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 38 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 281 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க ஆட்டக்காரர் கில்கிறிஸ்ட் அதிரடியாக 104 பந்துகளில் 13 பவுண்டரி. 6 சிக்சருடன் 149 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் இலங்கை அணி ஆடிய போது ஜெயசூர்யா (63 ஓட்டங்கள்). சங்கக்கார (54 ஓட்டங்கள்) களத்தில் நின்றவரை ஓரளவு நல்ல நிலையில் இருந்தது. அவர்கள் வெளியேற ஆட்டத்தை அவுஸ்திரேலியா தங்கள் பக்கம் முழுமையாக ஆக்கிரமித்து கொண்டது.

மீண்டும் மழை குறுக்கிட்டதால் இலங்கை 36 ஓவர்களில் 269 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது.




அவுஸ்திரேலியா வெற்றியை நோக்கி பயணித்த சமயத்தில் போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது 33 ஓவர் முடிந்திருந்தது.

'டக்வொர்த் -லீவிஸ்' விதிப்படி இலங்கை அணி 37 ஓட்டங்கள் பின்தங்கி இருந்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டு நடுவர்கள் அரங்கு திரும்பியதால், வெற்றி கொண்டாட்டத்தில் அவுஸ்திரேலியர்கள் திளைத்தனர்.

ஆனால்நடுவர்கள்வேண்டுமென்றால் ஆட்டத்தை நாளை தொடரலாம் என்று யோசனை கூறினர்.

இதைத் தொடர்ந்து இரண்டு தரப்பு அணித்தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பின்னர் அன்றே ஆட்டத்தை தொடர இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன சம்மதித்தார்.

வெளிச்சம் இல்லாததால் எஞ்சிய 3 ஓவர்களுக்கும் சுழற்பந்து வீச்சாளரை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து கடைசி 3 ஓவர்களும் ஏறக்குறைய இருளில் தான் நடந்தது. இலங்கை அணியால் 36 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 215 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

அவுஸ்திரேலியா 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வாகை சூடி 4ஆவது முறையாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது. இதில் 1999. 2003. 2007 என்று தொடர்ச்சியாக ஹட்ரிக் முறையில் வென்று வரலாற்று சாதனை படைத்தது அவுஸ்திரேலியா.(க)

# விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

## ஜொலிஸ்ரார் சம்பியன்

மதுஷனின் அதிரடி கைகொடுக்க விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம். வருடாந்தம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 2015 ஆம் ஆண்டுக்கான சம்பியனாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் தெரிவானது.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் பி.வதுரஸனனின் துல்லியமான பந்துவீச்சால் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் அணியும் ஜொலிஸ்டார்ஸ் அணியும் 7ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மோதின.



இவ் இறுதிப்போட்டி 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயற் சுழற்சியில் வென்ற ஜொலிஸ்டார்ஸ் அணி முதலில் களத்தடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய சென்றலைட்ஸ் [illegible] 31.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 125 ஓட்டங்களையே பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென்றலைட்ஸ் அணி சார்பில் ஜாம்ஷன் 19 ஓட்டங்களையும் சுபாஷ் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்டார்ஸ் அணி சார்பில் பகீரதன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், மதுஷன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை [illegible]னன். கல்கோகன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 126 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய ஜொலிஸ்டார்ஸ் அணி மதுஷனின் அதிரடி கைகொடுக்க 21.2 ஓவர்களில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்ததது.

ஜொலிஸ்டார்ஸ் அணி சார்பில் மதுஷன் 42 ஓட்டங்களையும் சஜீகன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் மணிவண்ணன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பில் அலன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கட்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை 8 விக்கெட்களால் ஜொலிஸ்டார்ஸ் அணி வெற்றி பெற்று விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம். வருடாந்தம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 2015ஆம் ஆண்டுக்கான சம்பியனாக தெரிவாகியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரனாகவும் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரனாகவும் ஜொலிஸ்டார்ஸ் அணியின் மதுஷன் (152 ஓட்டங்கள். 10 விக்கெட்டுக்கள்). இறுதிப்போட்டி (42 ஓட்டங்கள், 3 விக்கெட்டுக்கள் தெரிவானார். (க-23)

# கிளாசிக் செஸ் போட்டி: 6-வது சுற்றில் ஆனந்த் வெற்றி



8 முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள கிளாசிக் செஸ் போட்டி ஜேர்மனியின் படேனில் நடந்து வருகிறது. 7 ரவுண்ட் கொண்ட இந்த போட்டியில் நேற்று முன்தினம் நடந்த 6ஆவது சுற்றில் முன்னாள் உலக சம்பியன் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த். ஜேர்மனி வீரர் டேவிட் பராமிட்ஜியை எதிர்கொண்டார். சாதுர்யமாக செயற்பட்ட ஆனந்த் 65ஆவது நகர்த்தலுக்கு பிறகு டேவிட்டை தோற்கடித்தார். தொடர்ந்து 2 தோல்விகளை சந்தித்த ஆனந்த் இந்த ஆண்டில் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். 6 சுற்று முடிவில் உலக சம்பியன் மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே), அர்காட்ஜி நைட்டிட்ச் (ஜேர்மனி) தலா 4 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறார்கள். ஆனந்த் 2.5 புள்ளிகள் பெற்றிருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சி என்பது நல்ல செயல்களைச் செய்துமுடித்த போதுதான் வரும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துன்பம் தரும் ஆசிரியர் இடமாற்றம்; பொருத்தமான பொறிமுறை அவசியம்

*பாலும் சோறும் உண்ணத்தந்து படிக்கச் சொல்லும் அம்மா... அழுதிடாமல் பள்ளிக்கூடம் அழைத்துச் செல்லும் அம்மா... பள்ளிக்கூடம் விட்ட நேரம் பாதி வழிக்கு வந்து...*

*வித்துவான் வேந்தனாரால் இயற்றப்பட்டு அன்றைய நாளில் நாங்கள் பாடியது இந்தப்பாடல். இன்று பாடலுமில்லை... பாற்சோறுமில்லை. ஆம் வன்னிக்கு ஆசிரிய இடமாற்றம் பெற்ற ஒரு அம்மாவால் பள்ளிக்கூடம் விட்ட நேரம் பாதிவழிக்கு வந்து எங்ஙனம் பிள்ளையைத் தூக்கமுடியும்?*

வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் என்பது கல்வித்துறை சார்ந்த அனைவரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னி மாவட்டங்களுக்கு ஆசிரியர் இடமாற்றங்களை வழங்கும் போது, 99 சதவீதமான ஆசிரியர்கள் தமது இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி மேன்முறையீடு செய்கின்றனர்.

இவ்வாறு மேன்முறையீடு செய்கின்றவர்களின் காரணங்களைப் பார்க்கும் போது, உடல் சுகவீனம் - சிறுபிள்ளைகளின் பராமரிப்பு-வயதுபோன பெற்றோர்களின் பராமரிப்பு என்றவாறாக இருக்க கூடவே, குழந்தை இல்லாக்குறைக்கு சிகிச்சை பெறுகிறோம்- குழந்தைப்பேறு சுகப்பிரசவமாக இல்லாமல், சத்திர சிகிச்சை மூலமாகவே பிரசவம் நடந்தது. இதனால் தூரப் பயணம் கடினமானது என்ற காரணங்களும் இணைந்து கொள்கின்றன.

**அக்ரஹாரா காப்புறுதி** என்று அறிமுகமாகியதோ அன்றிலிருந்து வடக்கு மாகாணத்தில் அரசபணியாளர்களுக்கு சுகப்பிரசவம் என்பது இல்லாமல் போயிற்று என்ற உண்மையையும் இவ்விடத்தில் சொல்லித்தானாகவேண்டும்.

இது ஒரு புறம் இருக்க, வன்னி மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எங்களுக்கு யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் தாருங்கள் என்று கேட்பதிலும் நிறைந்த நியாயம் இருக்கின்றது. இந்த இரண்டு நியாயப்பாடுகளின் மத்தியில்; வடக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சர், கல்விச் செயலர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் என சகல தரப்பினரும் மிகப்பெரும் நிர்வாகச் சிக்கல்களையும் மன உளைச்சலையும் எதிர்கொண்டுள்ளனர்.

அதாவது இடமாற்றம் தாருங்கள் என்கின்ற வன்னி மாவட்ட ஆசிரியர்கள் ஒரு புறம். இடமாற்றம் வேண்டாம் என்று கெஞ்சுகின்ற யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மறுபுறம் என்ற இரு தரப்பிற்குமிடையில் தீர்மானம் எடுத்தல் என்பது மிகக்கடினமான விடயம்.

அதேசமயம் விருப்பமில்லாத இடமாற்றம்; விருப்பமில்லாத இடத்தில் சேவை என்ற இரண்டும் கற்பித்தல் என்ற செயற்பாட்டை வினைத்திறனுடையதாக்காது.

எனவே, ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் பொருத்தமான பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவது அவசியம்.

குழந்தை உள்ள ஆசிரியர் ஒருவரை வன்னிக்கு இடமாற்றம் செய்வது பொருத்தமற்றது என்பதை வடக்கின் கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் உட்பட அனைவரும் ஏற்றுக் கொள்வர். அப்படியானால் இடமாற்றம் ஏன் வழங்கப்படுகின்றது? என்ற கேள்வி ஏற்படும்.

இங்குதான் மாற்றுவழி இல்லை என்ற பதில் வெளிப்படும். குறித்த பதில் நியாயமானதாயினும் ஆசிரியர் இடமாற்றம் எனும் போது எழுகின்ற சோகக் கதைகளும் கண்ணீர் விட்டு அழும் நிலைகளும் பரிதாபத்திற்குரியவை என்பதால், வடக்கு மாகாண அரசு ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இடமாற்ற முரண்பாட்டை சமன் செய்யும் வகையில் புதிய ஆசிரியர் நியமனம் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானது. குறிப்பாக வன்னி மாவட்டத்தில் தகைமை உள்ளவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கி, அவர்கள் தங்களது சொந்த இடங்களில் நீண்டகாலம் பணி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது பொருத்தமான பொறிமுறைகளில் ஒன்றாகும். எனவே ஆசிரிய நியமனம் தொடர்பில் வடக்கு அரசு அவசரமாகச் சிந்திப்பது கட்டாயம்.

# மைத்திரி வந்திருக்காவிட்டால் படுகொலைகள் நிறைந்திருக்கும்

## பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த தேர்தலில் ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிட்டால் 300க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பர். எனினும் பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரின் நேர்மையான செயற்பாட்டினால் அது தடுக்கப்பட்டிருப்பதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை தேர்தலின் பின்னரான வன்முறைகள் தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இங்கு மேலும் கூறுகையில்,

புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மனித உரிமைகள் குறித்து பேசுவது போன்றும் படு கொலைகள் பற்றி ஹிட்லர் குரல் கொடுப்பது போன்றுமே இன்று தேர்தலின் பின்னரான வன்முறைகள் தொடர்பில் பிரேரணை கொண்டு வந்து இங்கு பேசிக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பிரேரணையைக்கொண்டு வந்து சமர்ப்பித்து உரையாற்றுபவர்களின் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நடந்தவை பற்றி நாடே அறிந்துள்ளது.

எதிர்க்கட்சி வரிசைகளில் அமர்ந்திருக்கின்றவர்களில் பலர் மோசடிகளுடன் தொடர்புபட்டவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கான சட்டம் சரியாக செயற்படும். முதலில் கடவுச்சீட்டு பறிக்கப்பட்டு பின்னர் சிறைகளுக்கே அனுப்பி வைக்கப்படுவர்.

அத்துடன் மீண்டும் ஆட்சியமைக்கப் போவதாக இங்கு சிலர் கூறித் திரிகின்றனர். நிச்சயமாக அவர்கள் வெலிக்கடையிலும் போகம்பரையிலும் தான் ஆட்சியமைக்கப் போகின்றனர்.

எனவே மைத்திரி நிர்வாகத்துடன் விளையாடிக்கொண்டிருக்க வேண்டாம என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நடைபெற்ற மறுதினத்தில் 300க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகியிருக்க வேண்டும். ஆனாலும் அது இடம்பெறவில்லை. ஆட்சிமாற்றம் ஏற்பட்டதால் இது தடுக்கப்பட்டது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருக்கா விட்டால நிச்சயமாக மேற்குறிப்பிட்ட படுகொலைகள் இடம்பெற்றிருக்கும். எப்படி இருப்பினும் பொலிஸ்மா அதிபர், இராணுவத தளபதி மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்டோரின் நேர்மையான செயற்பாடுகளால் எல்லா அனர்த்தங்களும் தடுத்து நிறுத்தப்பட்டன. (எ-11)

## அமைச்சர் பதவி தற்காலிகமானது

(கொழும்பு)

அமைச்சர் பதவி தற்காலிகமானது, நிறுவனங்களில் அதிகாரிகள் பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும் என துறைமுகங்கள் மற்றும் வானூர்தி அமைச்சர் அரஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சிவில் வானூர்தி ஆய்வு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் முறைகள் எதுவாயிருந்தாலும் கடந்த அரசாங்கத்தில் இடம் பெற்ற நன்மையானவைகள் இடைநிறுத்தாமல் முன் நோக்கி கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக் [illegible] வதிரி உல்லியனொல்லை ஆல [illegible] றலில் பாடசாலை அதிபர் நட [illegible] ராஜா தலைமையில் இடம் [illegible]

இந்நிகழ்வில் வடமரா [illegible] வித் திணைக்கள கல் [illegible] பிரதிக் கல்விப் பணிப் [illegible] வரசாமி ஸ்ரீகரன் பிரத [illegible] வும் கடற்றொழில் நீரிய [illegible] நிலை உதவிப் பணிப்பா [illegible] [illegible] கலந்து கொள்ளவுள்ளனர்.

## இராணுவத் தளபதியை பதவி நீக்க கோரிக்கை

## பொன்சேகா வேண்டுகோள்

(கொழும்பு)

இராணுவத் தளபதியை பணி நீக்க வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி மற்றும்இராணுவத்தளபதி ஆகியோரை பணி நீக்குமாறு சரத் பொன்சேகா அரசாங்கத்திடம் கோரியுள்ளார். என்ன காரணத்திற்காக இவ்வாறு பணிநீக்க வேண்டுமென அவர் தெரிவிக்கவில்லை.

கடந்த அரசாங்க காலத்தில் சரத் பொன்சேகா கடுமையாக அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக கட்சி தனியாக போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கட்சி தலைமையகத்தில் நேற்று பகல் இடம்பெற்ற செய்தியாளர் கலந்துரையாடலில், கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன் கட்சி நாடு பூராகவும் பலம் வாயந்த வாக்கு அடிப்படையை கொண்டதனால் தான் தனியாக தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து தொகுதிகளுக்கும் தொகுதி அமைப்பாளர்கள் இருப்பதனால் அவர்கள் அனைவரும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவார்கள் என பொன்சேகா தெரிவித்துள்ளார். (எ-11)

## கோத்தாவின் வர்த்தக நிலையங்கள் பெரு நட்டத்தில் இயங்குகின்றன

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவின் ஆலோசனையின் கீழ் முல்லைத்தீவில் இருந்து எடுக்கப்பட்ட மரங்களைப் பயன்படுத்தி பல கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட வர்த்தக நிலையங்கள் தற்போது பெரும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு 07 - சுதந்திர சதுக்க வலயத்தில் ஆர்கெட் இன்டிபெண்டன் என்ற பெயரில் இந்த வர்த்தக நிலையங்களை கடந்த வருடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

ஆர்கெட் இன்டிபெண்டன் வலயம என்ற பெயரில் சுமார் 5 வர்த்தக நிலையங்கள் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டன.

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து குறிப்பாக முல்லைத்தீவு காட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட பெறுமதி வாய்ந்த மரங்களைப் பயன்படுத்தியே இந்த வர்த்தக நிலையங்களின கதவுகள், ஜன்னல்கள், மாடிப்படிகள், மாடிகளுக்கான தளங்கள என்பன அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த 5 வர்த்தக நிலையங்களினால் இதுவரை ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாயுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பெருநஷ்டத்தினால் குறித்த வலயத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சில தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

பகவான் ஸ்ரீ ராமகிரு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா அமர்வில் திட்டமிட்டபடி சர்வதேச விசாரணை அறிக்கை!

## த.தே.கூ.மேற்குலக நாடுகளிடம் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்) ஜெனீவாவில் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை திட்டமிட்டபடி கொண்டு வரப்பட வேண்டுமென மேற்குலக நாடுகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை அரசாங்கம் கால அவகாசத்தைக்கோரி வருகின்ற நிலையிலேயே சர்வதேச விசாரணை அறிக்கை காலம் தாழ்த்தாது கொண்டு வரப்பட்டு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்க மேற்குலகம் தொடர்ந்தும் முன்வர வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை தமிழ் தரப்பினர் கோரி வந்த நிலையில் போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை கோரும் பிரேரணை ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இலங்கை மீது சர்வதேச விசாரணை அவசியமென்ற கருத்து மேற்குலகிடம் வலுப்பெற்று வந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினால் இந்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளும் முயற்சிகள் தாமதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசு சர்வதேச விசாரணை அறிக்கையை பிற்போடுமாறு மேற்குலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கமைய சில மேற்குலக நாடுகளும் புதிய அரசிற்கு சாதமான முறையில் சர்வதேச விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பிற்போடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

எனினும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் அநீதிகளுக்கு சர்வதேச விசாரணையின் மூலமாகவே நீதியான நியாயமான தீர்வு கிடைக்குமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தரப்பினர்கள் கோரி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இதனை பிற்போடக் கோரும் அரசின் கோரிக்கையையும் பிற்போடுவதற்கு முயற்சிக்கும் மேற்குலக நாடுகளின் முயற்சியையும் நியாயமற்றதென மறுதலித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மார்ச் மாதம் இடம்பெறவுள்ள கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கடந்த கால கூட்டத் தொடர்கள் போன்று இம்முறையும் கூட்டமைப்பு உறுதியுடன் செயற்படும். இதனூடாகவே தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என நம்புவதாகவும் காலத்தை இழுத்தடிப்புச் செய்வது ஆரோக்கியமற்றதென்றும் கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் நீண்ட காலமாக இழுபறியிலிருந்து வந்த இனவழிப்பு பிரேரணை நேற்றைய அமர்வில் முதலமைச்சரினால் பல ஆதாரங்களுடன் 11 பக்க அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள கூட்டத்தொடரிலேயே இலங்கை மீதான சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# யாழ்.வணிகர்கழக பொதுக்கூட்டம்

### வர்த்தகர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட யாழ்.வணிகர் கழகத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ்.வணிகர் கழகம் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கடந்த வருடத்திற்கான முகாமைத்துவ சபையின் அறிக்கை, வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் முகா மைத்துவ ச஌பக்கான ஏனைய அங்கத்தவர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை 7 வேலை நாட்களுக்கு முன்னதாக அங்கத்தவர்களால் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட ஏதாவது விடயங்கள் இருப்பின் அது பற்றிய விளக்கங்களும் தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன.

யாழ்.வணிகர் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி அறிவித்தலை தங்களுக்குரிய அழைப்பாகக் கருதி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில்கலந்துகொள்ளுமாறுவணிகர் கழக செயலாளர் இ. ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ-3)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இளைஞர் கழகம் ஊடாக வழங்கப்பட்டன



பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தினூடாக வழங்கப்பட்டன.


பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனால் வழங்கப்பட்ட இவ் உதவிகள் கற்க ஆசையிருந்தும் கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இச் செயற்பாடுகள் ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன. முள்ளி...து நோக்கு மண்டபத்தில் ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தின் தலைவர் F.X.D. கூரே தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் ஆனைக் கோட்டை இளைஞர் கழகத்தினர், மாணவர்களின் பெற்றோர்கள் , மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-5-23)

# பா.ஜ.க.வுக்கு மரண அடி

### வைகோ தெரிவிப்பு



(சென்னை)

இந்தியாவில் மத்தியில் ஆளும் நரேந்திர மோடி அரசுக்கு டில்லி வாக்காளர்கள மரண அடி கொடுத்துள்ளதாக மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் கெ.திருச்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ...ந்து கொள்ளவுள்ளார்.

... விருந்தினர்களாக வலி... வலய திட்டமிடல் பிரி... ...பாளர் எஸ்.தேவம... ...ழை கோட்டக் ... எஸ்.சண்முக... ...க்கு பிரதேச ... ...கீர்தன் ஆகி... ...ிருந்தினர்க... ...ணக்கள பொறி... ...வராஜா கலந்து ...னர். (இ-3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 230 | 250 |
| தக்காளி | 180 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 100 | 90 | 120 |
| கரட் | 140 | 120 | 130 | 160 |
| பூசணி | 80 | 100 | 90 | 100 |
| புடோல் | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 90 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 60 | 80 | 100 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 280 | 200 | 230 | 240 |
| பீற்றூட் | 60 | 150 | — | 100 |
| கறிமிளகாய் | — | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | — | 800 | — | — |
| போஞ்சி | — | 100 | — | 150 |
| கத்தரிதம்புள்ள | — | 30 | 70 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-45 | 40-50 |
| இராசவள்ளி | 90 | 120 | 90 | 120 |
| வெங்காயப்பூ | 60-100 | 100 | 90 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள...

இராணுவ முகாம்கள் எதனையும் அப் புறப்படுத்தப் போவதில்லை என்ற உறுதி மொழியை அளிக்கவுள்ளோம் என்பது. அதனைக் கேட்டுவிட்டு அவரின் மாமனார் ஜே.ஆர். ஜயவர்த்தனா போன்று, பொதுவாகச் சிரிக்காத அவர், சற்றுச் சிரித்தார். அதிலிருந்து நான் புரிந்து கொண்டது என்னவென்றால் மகா நாயக்க தேரர்களுக்கு இவ்வாறு கூறி அவர்களின் மனங்களைக் குளிர்விக்கப் போகின்றேன். அடுத்த தேர்தலில் நாங்கள் வெல்ல வேண்டும் அல்லவா? என்பது போலத்தான் அவரின் கூற்றை அர்த்தப்படுத்திக் கொண்டேன். அந்தச் சூழ்நிலை காரசாரமான கருத்துப் பரிமாறல்களுக்கு உகந்த சூழ்நிலையல்ல. மௌனம் காத்தேன்.

ஆனால் மருமகனார் கௌரவ ருவான் விஜேவர்த்தனா படையினரிடையே சென்று அதே கருத்தைச் சொன்ன போது தான் நான் விழித்துக் கொண்டேன். என்ன நடக்கிறது இங்கே?

இராணுவ முகாம்

சில வாரங்களுக்கு முன்னர் தான் எமது மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் அவர்களைச் சந்தித்து வலிகாமம் வடக்கில் இராணுவத்திற்கு வேண்டப்படாத காணிகளில் மக்கள் மீளக் குடியேற வசதி அளிக்க வேண்டும் என்று கோரி அதற்கான அங்கீகாரத்தையும் பெற்று வந்தோம். 6500 ஏக்கர் காணியில் ஐயாயிரம் ஏக்கரையாவது விடுவிக்க வேண்டும் என்று கேட்டு வந்தோம்.

அதற்குப் பக்கபலத்தையும் சுவாமிநாதன் காட்டியிருந்தார். ருவான் விஜேவர்த்தன கூறுவதைப் பார்த்தால் இராணுவத்தினருக்கு இடைஞ்சல் வரும் போல் இருக்கின்றதே! ஆறாயிரத்தைநூறில் ஹாயாக இருந்த அத்தனை இராணுவத்தினரையும் ஒருவரைக்கூட வெளியேற்றாமல் ஆயிரம் ஏக்கரினுள் அடைபட்டுக் கிடக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என்று எண்ணிப் பார்த்தேன். இராணுவத்தினரைக் குறைக்கமாட்டோம், இராணுவ முகாம்களை நீக்கமாட்டோம் என்பது இராணுவத்தினருக்கும் சிங்கள மக்களுக்கும் புதிய அரசாங்கம் கூறும் கூற்று. இராணுவத்தினரை அப்புறப்படுத்துவோம், முகாம்களைக் குறைப்போம், மக்களை மீளக் குடியமர்த்துவோம் என்பது தமிழ் மக்களுக்குக் கூறும் கூற்று. இது எங்கோ சென்று இடிக்கின்றதே என்று சிந்தித்துப் பார்த்தேன். தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவே இவையெல்லாம் கூறப்படுகின்றன என்பதை உணர்ந்தேன். ஆனால் ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் கேட்கின்றேன். வரும் பாராளுமன்றத் தேர்தலில் எங்கள் அனுசரணையுடன் தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குகளுடன் நீங்களும் வெற்றி அடைகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் மீண்டும் பிரதமர் ஆகின்றீர்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அப்பொழுது இராணுவ முகாம்களை நீங்கள் அப்புறப்படுத்த உங்களுக்கு வாக்களித்த சிங்கள சகோதர சகோதரியினர் விடுவார்களா? அனுமதி வழங்குவார்களா? நாங்கள் அப்புறப்படுத்த மாட்டோம் என்று உங்கள் மருமகனைக் கொண்டு உறுதிமொழி அளித்ததால்தானே நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம் என்று அவர்கள் கூற மாட்டார்களா? அப்பொழுது நீங்கள் எங்களைப் பார்த்து நான் என்ன செய்ய? சிங்கள மக்கள் இராணுவத்தைக் குறைக்க, முகாம்களைக் குறைக்க இடம் அளிக்கின்றார்கள் இல்லை என்று கூற உங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? இதைத்தானே சரித்திரம் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே பழைய குருடி கதவைத் திறடி என்ற நிலைக்கே நாங்கள் வந்துள்ளோம். எம்மை ஏமாற்ற சதிகள் நடக்கின்றன என்று தெரிந்து கொண்டேன். இதனையே ரணில் விக்கிரமசிங்க அவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**சதிராட்டத்தில் குளிர்காய முயற்சி**

அதனை எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்திருக்கும் அளவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பதே எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இவ்வளவு நடந்தேறியும் அரசியல் சதிராட்டத்தில் குளிர் காயவே அரசியல் வாதிகள் எத்தனிக்கின்றார்கள். புதிய அரசாங்கத்திடம் கேட்கின்றேன் இன்றைய நிலையை, இதுவரை தமிழ் மக்கள் அனுபவித்த நிலையை, இன்னல்களை, இடர்களைச் சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறி நாம் இந் நாட்டில் புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்க எண்ணியுள்ளோம். நாம் வடகிழக்கில் இராணுவ முகாம்களை ஒரு சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மட்டும் நிலை நிறுத்தவுள்ளோம். மற்றைய இடங்கள் எல்லாவற்றிலும் இருந்து வாபஸ் பெற்று மேலதிகமாயுள்ள இராணுவத்தினரை குடியியல் வாழ்க்கைக்குத் திரும்ப, நடவடிக்கை எடுக்கப்போகின்றோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சேர்ந்து சகோதரத்துவத்துடன் எமக்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஒரு புதிய கலாசாரத்தை ஏன் உருவாக்க முன்வருகின்றீர்கள் இல்லை? வடக்கையும் தெற்கையும் ஒன்று சேர விட வேண்டும் அவர்களின் மனங்களை இணைக்க வேண்டும் என்று ஜனாதிபதி அவர்கள் கூறியுள்ளார்.

ஜனநாயகவாதி என்று பெயர் பெற்ற நீங்கள் ஏன் பத்தாம் பசலிப் பழைய அரசியல் தந்திரோபாயங்களுள் அமிழ்ந்து இருக்கின்றீர்கள்? என்று இதைத் தான் பிரதம மந்திரி அவர்களிடம் நான் கேட்கின்றேன்.

ஏமாற்றல் கலாசாரம்

ஏமாற்றுதலை அரசியல் கலாசாரமாக வளர்க்காமல் உண்மையையும் உரிய உள்ளன்பையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டும் ஒரு உயர்ந்த கலாசாரமாக அரசியலை நாங்கள் மாற்றி அமைக்க முடியாதா? இதனால் தான் அவசரப் பட்டு, அல்லல் பட்டு, அசதியான உடல் நிலையிலும் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். இந்தப் பிரேரணை உண்மையை உலகிற்கு உணர்த்தும் பிரேரணை. உள்நாட்டு மக்களின் உன்மத்தங்களால் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை உலகத்திற்கு எடுத்துரைக்கும் பிரேரணை.

தொடர்ந்து வந்த தமிழர் அழிப்புச் செயல்கள் இனியும் தொடர வேண்டுமா என்ற கேள்வியை உலக அரங்கில் கேட்டு வைக்கத் தயாரித்த தமிழ் மக்களின் ஆவணம். இந்த ஆங்கில மொழியிலுள்ள ஆவணம். தொடர்ந்து வந்துள்ள சிங்கள அரசியல் வாதிகளின் பேராதிக்கச் செயல்களால் துயருற்ற தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கும் ஆவணம் இது. இது உலக மக்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் உடனேயே தீர்க்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தும் நல்லாவணம். இதனை தம்மைக் குறை கூறும் ஆவணமாக அரசாங்கம் எடுக்காமல் அரசியல் இலாபம் பெறலாம் என்று எதிர்க்கட்சியினர் எண்ணாமல் உண்மையை உணர்ந்து உகந்ததைச் செய்ய இந்த உண்மையாவணம் உதவி புரிய வேண்டும் என்றார். (எ-11)

# அரசுக்கு...

பதவி கிடைத்தாலும் மக்களுக்கு நாம் சேவையாற்ற வேண்டும். சர்வாதிகார ஆட்சி நடத்திய அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டனர்.

100 நாள் திட்டத்தை அமுல்படுத்துவதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக அமைந்துள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ சொய்சாபுர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# விமலின்...

சீட்டில் பிறந்த வருடமாக 1971 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்விரு கடவுச் சீட்டுக்களிலும் மாறுபட்ட பெயர்களே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டன.

இது தொடர்பில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (எ-11)

# மரண அறிவித்தல்

## வைரவன் மாரிமுத்து (நடேசு)



அல்வாய் வடக்கு மாறாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் மாரிமுத்து அவர்கள் நேற்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் -முத்தம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற மகேசன்-பிள்ளையம்மா தம்பதிகளின் மருமகனும், அமரர் புத்திவிநாயகம், நல்லம்மா ஆகியோரின் பாசமிகு கணவரும், மாசிலாமணி, நவநீதமணி (அதிபர்-யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, தலைவர் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்), ஜெயரூபன் (அசோக்-சுவிஸ்), ராகவன் (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்-கரவெட்டி), வதனி, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுடர்விழி, சயதா (ஆசிரியர் -பருத்தித்துறை சித்திவிநாயகர்), உதயராணி (சுவிஸ்), மகாதேவன், ஜீவினி ஆகியோரின் மாமனும், சுரேஸ், சுகந்தன், அகல்யா, அஜந்தன், ஜெனந்தன், ஆரதி, ஆதுஜா, அபிஷா, ஜெனுசன் (சுவிஸ்), பவியாணி (சுவிஸ்), பிரியந்தன் (சுவிஸ்), தேவிஜா, ஜெனுசிகா, அஸ்வியா, அனுஸ்ராம் ஆகியோரின் அன்புப் பேரனும், விக்னேஸ்வரமூர்த்தி, சண்முகேஸ்வரமூர்த்தி, பரமேஸ்வரி, இராசமணி, லட்சுமிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2015) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:மா.நவநீதமணி**
**(அதிபர்-தேவரையாளி இந்துக் கல்லூரி)**

(சி-083)

# இன்னமும்...

வரும் நாட்களில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்திய பின்னரே கருத்து தெரிவிக்கவுள்ளதாக பொதுபல சேனாவின் பிரதான செயலாளர் வணக்கத்துக்குரிய பிக்கு கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார். (எ-11)

# இனப் படுகொலையே!...

பதற்கு சர்வதேச பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தலைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த ஆண்டு சபையில் சமர்ப்பித்திருந்தார்.

அப்போது, அந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் போதிய ஆதாரங்கள் கிடையாது, அதனை சபையில் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல என்ற வகையில் காரணங்கள் கூறப்பட்டிருந்தது. அதனையொட்டி கடும் வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்று அந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படாமலே இருந்து வந்தது.

இந்தப் பின்னணியில் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என தெரிவித்து, அந்தப் பிரேரணையை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஒப்புதலுடன் நேற்று சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்த முதலமைச்சர் அது குறித்து தமிழில் விசேட அறிக்கையொன்றை வாசித்ததுடன், நீண்ட விளக்கம் ஒன்றை ஆங்கில மொழியில் வழங்கினார்.

பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 30 உறுப்பினர்களும் எழுந்து நின்று அதனை வழிமொழிந்தனர். அதன்பின்னர் சபையில் நிறைவேற்றப்பட்டது.

சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தமது கட்சியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த பகுதியை நீக்கினால் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும் என தெரிவித்தார். ஆயினும் அந்த விடயத்தை நீக்குவதற்கு மறுத்து, ஈ.பி.டி.பி என்ற கட்சியின் பெயர் மாத்திரம் நீக்கப்பட்டதையடுத்து, அவரும் பிரேரணையை ஆதரித்திருந்தார்.

சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான அறிக்கை திட்டமிட்டபடி வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என்பதால் அந்த அறிக்கை பிற்போடப்படக் கூடாது என்பதை இந்தப் பிரேரணை வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பிரேரணை உண்மையை உலகிற்கு உணர்த்தும் பிரேரணை. உள்நாட்டு மக்களின் உன்மத்தங்களால் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை உலகத்திற்கு எடுத்துரைக்கும் பிரேரணை என இந்தப் பிரேரணை பற்றி முதலமைச்சர் விக்னேஸ்வரன் சபையில் தெரிவித்துள்ளார்.

கடந்த 1972-ம் ஆண்டின் அரசியல் யாப்பினால் தமிழ் மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கினார்கள் சிங்கள அரசியல் வாதிகள். இதனை சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கும் ஆவணமாகவே இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். இன்றைய சூழ்நிலையில் இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப் படாவிடில், ஜெனிவாத் தீர்மானம் உரிய காலத்தில் உண்மையை உரைக்காவிடில் எமது தமிழ் மக்களின் பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதைக் கட்டியம் கூறும் கருத்து மிகுந்த ஆவணமாகவே இந்தப் பிரேரணையை இந்த மதிப்புசால் சபை முன்னே பிரேரிக்கின்றேன்.

இதை இன்று இங்கு உங்கள் முன்னிலையில் பிரேரித்து அது ஏற்கப்படாது விட்டால் நாங்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு எமது வாழ்நாளெல்லாம் முகம் கொடுக்க நேரிடும். நடந்தது பிழையென்ற மனப்பக்குவத்தை எமது சகோதர சிங்கள அரசியல்வாதிகளின் மனதில் விதைக்கவே இதைக் கொண்டு வந்துள்ளேன் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் சபையில் விளக்கமளித்துள்ளார்.(எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற உறுப்புரிமை...

நாடவும் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமையை அரசாங்கம் எவ் வாறு ரத்து செய்து, மீளவும் பதவியில் அமர்த்தியதோ அதே போன்று தமது பாராளு மன்ற உறுப்புரிமை யையும் வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ்பெற்றுக்கொள் ளப்பட்டதுடன், இரா ணுவ பட்டங்களும் மள வழங்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

முதலில்தமது ஆச னத்தை வழங்கு வதாக ஜயந்த கெட்ட கொட தெரிவித்த போதி லும் தற்போது சற்று பின்வாங்கி வருவதா கத் தெரிவித்துள்ளார்.

ஜயந்த கெட்டகொட தமது ஆசனத்தை வழங்க முடியும் என தேர்தல் ஆணையாள ரும், சட்டமா அதிபரும் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜயந்த கெட்டகொட பதவியை ராஜினாமா செய்தால், தாம் அந் தப் பதவியை பெற் றுக்கொள்ள முடியும் எனவும், கெட்டகொட விடம் தாம் பதவியை யாசிக்க வில்லை எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவோ அல் லது வெறும் பாராளு மன்ற வரப்பிரசாதங் களுக்காகவோ பத வியை மீள அளிக்கு மாறு கோரவில்லை எனவும், இந்த பதவி மிகவும் குறுகிய காலத் திற்கே இருக்கும் என் பது தமக்கும் தெரி யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் வெற்றிக்காக ஒத் துழைப்பு வழங்கிய தமக்கு பாராளுமன்ற உறுப் புரிமை வழங் கப்பட்டால் கட்சி ஆதர வாளர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என வும் அவர் தெரிவித் துள்ளார். (எ-11)

## வட மாகா...

போது நடைபெற்ற தாகக் கூறப்படும் சில அட்டூழியங்கள் குறித்து விசாரிக்க, சர்வதேச நடைமுறைகளுக்கு அமைய, ஏற்புடைய வகையில் உள்நாட் டிலேயே விசாரணை யொன்றை அரசு நடத்த வுள்ளது.

விடுதலைப் புலி களும் பிரபாகரனும் பொது மக்களை போரின்போது மனி தக் கேடயங்களாகப பயன்படுத்தியது தான, இறுதிகட்ட போரின் போது ஏற்பட்ட பெரு மளவு உயிரிழப்பு களுக்கு காரணம்.

போர் முடிந்த பிறகு எந்த தமிழ் அரசியல் தலைவரும் இனப் படு கொலை என்று கூறப்படுவது குறித்து தன்னுடனோ அர சுடனோ விவாதிக்க வில்லை. இனப்படு கொலை என்று கூறி இயற்றப்பட்டுள்ள வட மாகாண சபை யின் தீர்மானத்தை மத்திய அரசு எவ் வகையிலும் ஏற்றுக் கொள்ளாது என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (எ-4)

## பிரி.வெளிவிவகார...

வெளியுறவு அமைச் சருடன் சிறந்த சந் திப்பு ஒன்றை மேற் கொண்டதாக ஸ்வைர குறிப்பிட்டார்.

இதேவேளைகடந்த மாதம் இலங்கை வந திருந்த ஸ்வைர்; ஜனாதிபதி, பிரதமர், வடக்கு ஆளுநர் உட் பட்டவகையில் அனைத்து தரப்பின ரையும் சந்தித்தார்.

இதன்பின்னர் நாடு திரும்பும் போது இலங்கை அரசாங் கம் சர்வதேச நாடு களுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஸ்வைர் குறிப்பிட்டி ருந்தார்.

இதேவேளை தற் போது லண்டன் சென றுள்ள இலங்கையின வெளியுறவு அமைச் சர் அங்கிருந்து அமெ ரிக்காவுக்கு சென்று ராஜாங்க செயலாளர் ஜோன் கெரியை சந் தக்கவுள்ளார். (எ-11)


# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் சகாதேவசங்கரி

(ஓய்வு பெற்ற பதில் முகாமையாளர் மக்கள் வங்கி)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கு இல. 8/7, சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகாதேவசங்கரி நேற்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரசிங்கம் இரத்தினம் தம்பதியினரின் மகனும் கமலநேத்திரா (சங்கரி மிஸ்) ஓய்வு நிலை ஆசிரியர் யாழ். இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் பாச மிகு கணவரும் கஜதேவசங்கரி (லண்டன்), யாதேவசங்கரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். Dr.காவேரி (லண்டன்), தர்சினிமா (கனடா) ஆகியோரின் பாச மிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-082)

தகவல் : வீரசிங்கம் ஆனந்தசங்கரி (சகோதரன்)

Advance Version
Auto CAD
Personal-Group-Visiting Classes
Jaffna-Vavuniya-Colombo
Punch Home Designing
(3D-Animation Software)
Interior &Exterior Designing
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert. In Auto CAD Software (2D &3D)
University of Peratheniya - Sri Lanka
Cert. In Advance 3D- Modeling in Auto CAD
University of Moratuwa - Sri Lanka.
LINK-0775116320 - 0718617972
(C-081)

A/L - Day Class
புவியியல்- N. பூர்ல
● DMI - யாழ்.திங், புதன், வெள் - 6.30 am (சனி, ஞாயிறு - 12pm)
● CCA - சுன்னாகம் (சனி, ஞாயிறு - 5 pm)
● ஆட்ஸ் அக்கடமி - புத்தூர் (செவ், வியாழன் - 3 pm)
● பிற்ஸ்மன் - மானிப்பாய் (செவ், வியாழன் - 6.30 am)
அலகு ரீதியான மீட்டல், வாராந்தம் பரீட்சைகள்.
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(9485)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 12.02.2015
Batch 2 : 14.02.2015
Batch 3 : 15.02.2015
Batch 4 : 16.02.2015
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
0777585913, 0777222422, 071429935
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 12/02/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.
(C-080)

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
தரம் 1 முதல் 11 வரையான இரண்டாம் மொழி சிங்கள Model Paper வெளி வந்துவிட்டது.
● 15 % முதல் 20 % வரை விலைக்கழிவு.
Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது. பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்
யாழ். புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
(C-076)
தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552

வேலைவாய்ப்புகள்
நீங்கள் O/L பயின்றவரா?
சர்வதேச ரீதியில் 31 வருட காலமாக இயங்கிவரும் பல்தேசிய கம்பனிக்கு துடிப்பும், ஆர்வமும் உள்ள இளைஞர்கள் தேவை...
■ அலுவலக உதவியாளர் ■ நிர்வாக அதிகாரிகள்
■ மேற்பார்வையாளர்
● அனுபவம் அவசியமில்லை
● தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
● சம்பளம் 15,000/= - 18,000/=
● வயதெல்லை 18-28
தொடர்புகளுக்கு:-
0715123452, 0771363797, 0777981471
(C-062)

FRENCH MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
LA POINTE COURTE
An early New Wave Movie : the life in a fishing village.
(Black & White, 1955, 80 min)
on
Thursday 12 February 2015 at 4:00 p.m. at
Alliance Française de Jaffna.
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
French Language. English subtitles. Free entrance
(9482)

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்



அருள் ஒளி தர்சன மாலையும் மாசி மாத சிறப்புப் பூஜையும்
இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 15.02.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும் மாசி மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.
ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.
குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தர்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.
யாழ் தொடர்புகளுக்கு 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192
(9450)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af
வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வ்தேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)



வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(9481)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org